# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

பிப்ரவரி-2016
பருவம் 2 புனல் 17

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20

எனக்கு இன்னொரு பேர் இருக்கு...
## 'ஜாதி மாடு'





# காதலர் நாளில் முத்த மழை



**“காலை 7.45 முதல் 8.45 வரை மெரினா கடற்கரையில் ஜோடிகளாக, பாடல்களைப் பாடிக்கொண்டே நடைப்பயணம், காலை 10.45 முதல் 11.45 வரை காதல் ஜோடிகள் முத்தமிட்டுக் கொள்ளும் நிகழ்ச்சி”** என காதலர் தின அறிவிப்பிலேயே காவிகளுக்குக் கலவரத்தைக் காட்டியது பெரியாரியப் பெண் விடுதலை இயக்கம்.

தோழர் குகன் சுவாமிநாதன் தனது முகநூலில், “காதலர் தினத்திற்குத் தோழர்களுடன் ஏதோ பல நிகழ்ச்சிகள்ளாம் திட்டமிட்டோம் ஆனால் நாங்கள் திட்டமிட்டதை விட மிகவும் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்தது இந்து மக்கள் கட்சி. உழைப்பாளர் சிலை அருகில் ஒன்று கூடி காதலர் தினத்திற்காகத் தயார் செய்த பேனரை புடித்துக் கொண்டு காதலர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டும் வாழ்த்துத் தெரிவித்தும் நடந்து சென்றோம். எதிரே தவ்ஹித் ஜமாத்தைச் சேர்ந்தவர்கள் காதலர் தினத்தை எதிர்க்கும் வகையில் துண்டறிக்கை கொடுக்க அவர்களுக்கும் இனிப்பு வழங்கி காதலர் தின வாழ்த்து தெரிவித்தோம்.

தோழர் நாத்திகன் எங்களிடம் வந்து கண்ணகி சிலை அருகே இந்து மக்கள் கட்சி ஏதோ ஆர்ப்பாட்டம் பன்றாங்களாம் கண்டிப்பா அங்கே இருக்கும் காதலர்களுக்குத் தொந்தரவு கொடுப்பார்கள். நாம் அங்கே போயிடலாம். திராவிடர் விடுதலை கழக தோழர்களும் இருப்பாங்கனு சொன்னவுடனே நாங்க அங்க போயிட்டோம். அங்கு, காவிக் கும்பல் அங்கே ஏதோ வாழ்த்து அட்டையை எரித்து விளையாடி கொண்டு இருந்துனர். உடனே த.பெ.தி.க தோழர்களிடம் தகவல் தெரிவித்தோம். அவர்களும் அங்கே வந்துவிட்டனர்.

மெரினாவைக் கருப்புச் சட்டைகள் ஆக்கிரமித்த பிறகு எதாவது செய்தால் பதிலடி கிடைக்கும் எனப் புரிந்து கொண்ட காவிக் கும்பல் கைது என்ற பெயரில் அடக்கி வாசித்து காவல்துறை வாகனத்தில் ஏறி பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுவிட்டனர். ஊடகத்தில் உள்ள தோழர்கள் எங்களிடம் வந்து நீங்கள் இங்கே இருப்தால் தான் அவர்கள் அடக்கி வாசித்தனர் இல்லையென்றால் அவர்கள் தங்களுடைய வேலையைக் காட்டியிருப் பார்கள் என்று கூறினர். நிகழ்ச்சியை மேலும் சிறப்பிக்கும் வகையில், தோழர்கள் கிருத்திகா, நாத்திகன் இணைந்து கேக் வெட்டி அனைவருக்கும் கொடுத்தோம். முத்தங்களின் மூலமாக அன்பை வெளிப்படுத்தினோம்.” என்று பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாட்டில், முதன் முறையாக, முத்தமிடல் என்ற இனிய காதல் வெளிப்பாட்டை நிகழ்ச்சி நிரலில் இணைத்து காதலர் நாள் விழாவை நடத்திய பெரியாரியப் பெண்ணிய விடுதலை இயக்கத்திற்கும் – பொதுவெளியில், மீடியாக்கள் முன்னிலையில் முத்தமிடலைத் தொடங்கிவைத்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் நாத்திகன், கிருத்திகா ஆகியோருக்கும் – இனி நடக்கப் போகும் காதலர் நாள் விழாக்கள் பொதுவெளியில் முத்தமிடலோடுதான் நடத்தவேண்டும் என்ற உந்துதலை உருவாக்கிய பெ.பெ.வி.இயக்கத் தோழர் தமிழ்வாணன் அவர்களுக்கும் – இவைகளுக்குத் தோள்கொடுத்துத் துணைநின்ற தி.வி.க தென்சென்னை மாவட்டத் தலைவர் தோழர் உமாபதி, மயிலை ஜான் மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்டச் செயலாளர் ச.குமரன் அவர்களுக்கும், தோழர்களுக்கும், மேட்டூர் தோழர் முல்லைவேந்தன் அவர்களுக்கும் காட்டாறு குழு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த 2014 ல் கேரளாவில் முத்தப்புரட்சி நடந்த நேரத்தில், காட்டாறு நவம்பர் 2014 ஏட்டில், “தமிழ்ப்பண்பாட்டை மீட்க விரும்புவோரும், அறிவியல் பண்பாடு மற்றும் திராவிடர் பண்பாட்டை வாழ்வியலாகக் கடைபிடிக்க விரும்புவோரும் முத்தப்புரட்சியை வரவேற்போம். தமிழர் பண்பாட்டை மீட்டெடுக்க விரும்புவோர் தமிழ்நாட்டில் முத்தப்போராட்டத்தை நடத்த முன்வரவேண்டும். இது பெரியார் மண் என்பதை உறுதிப்படுத்தத் துடிப்பவர்களும் இந்தப் போராட்டத்தை தமிழ்நாட்டில் நடத்த முயற்சி எடுக்கவேண்டும்.” என வேண்டுகோள் விடுத்தோம்.

‘அரபிக்கடலோரம் முத்தப்புயல்....நாடெங்கும் அன்புமழை’ என்ற காட்டாறின் கட்டுரையைப் படித்த காவிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். கருப்புச்சட்டை, சிவப்புச்சட்டை போட்டுக் கொண்டிருக்கும் சில பெருசுகள் கூட ‘இதை எல்லாம் ஆதரிக்க முடியாது’, ‘ஒழுங்கீனம்’, ‘முதலாளித்துவக் கலாச்சாரம்’ என்றெல்லாம் பதறித் துடித்தனர். கேரளாவின் முத்தப்புரட்சிகூட காவிகளின் தாக்குதல்களுக்கு எதிர்வினையாக நடந்ததுதான். பெ.பெ.வி.இயக்கமோ, முத்தமிடலைத் திட்டமிட்டு நடத்தி அனைத்து ஆர்த்தடாக்ஸ்களுக்கும் ஆப்படித்து விட்டது.

# கல்வித்திட்டங்களை வகுப்போருக்கும், பெற்றோர்களுக்கும் வழிகாட்டும் பாபுகண்ணன் - நிர்மலா



நான் பாபுகண்ணன், என் துணைவியார் பெயர் நிர்மலா, எங்கள் மகள் பெயர் மகிழ். அவர் 7 ஆம் வகுப்பு படித்து வருகிறார். நாங்கள் 2005 முதல் மதுரையில் வசித்து வருகிறோம். நாங்கள் வாரத்தின் ஒவ்வொரு இறுதிநாளும் மதுரையைச் சுற்றியுள்ள வரலாறு சார்ந்த இடங்கள் தலைவர்களின் மணிமண்டபங்கள் மற்றும் முக்கிய சுற்றுலா இடங்களையும் வரிசையாகப் பார்த்துக்கொண்டு வந்தோம்.

ஒவ்வொரு இடத்திற்குச் செல்லும்முன் அந்த இடம் பற்றிக் குழந்தைக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் முதலில் அந்த இடம் பற்றிய செய்திகளை நன்கு அறிந்து கொள்வோம். அதே போல் மதுரையில் உள்ள அனைத்துத் தலைவர்கள் சிலைகளைப்பற்றியும் அது எந்தக் காலகட்டத்தில், எதற்காக, யாரால் வைக்கப்பட்டது என்ற தகவல்கள் பற்றி விளக்கி வந்தோம்.

குழந்தை 3 ம் வகுப்பு பயிலும் போது ஒரு முறை விமானம் புறப்படுவதையும் தரையிறங்குவதையும் நேரடியாகக் காண்பித்தோம். . குழந்தை அதைப் பார்த்து மகிழ்ந்தார். மறுநாள் வகுப்பறையில் விமானம் எப்படி பறக்கிறது என்ற கேட்டவுடன் குழந்தை தெளிவாக விளக்கியுள்ளார். ஆசிரியர் மிகவும் பாராட்டியுள்ளார். அந்தச் சம்பவம் குழந்தைக்கு மிகவும் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் பாடம் பற்றிய புரிதலையும் தந்தது. அப்போதுதான் எங்களுக்குள் ஒரு எண்ணம் உதயமானது. அந்த ஆண்டு பாடப்புத்ததகத்தில் உள்ள முக்கியமான - நம்மால் நேரடியாகக் காண வாய்ப்புள்ள இடங்களைச் சென்று பார்ப்போம் எனத் தீர்மானித்தோம்.

பாடப்புத்தகத்தில் பரிமாற்கலைஞர், காந்தி பற்றிய பாடங்கள் இருந்தன. உடனே நாங்கள் பரிமாற்கலைஞர் பிறந்த வேளச்சேரிக்கு அழைத்துச் சென்றோம். காந்தி மியூசியம் சென்று காந்தி பற்றிய குறிப்புகள் மற்றும் அவர் சுடப்பட்டபோது அணிந்திருந்த ஆடைகளைக் காண்பித்தோம். அடுத்தடுத்து வகுப்பறையில் இந்தப் பாடங்களை நடத்தும்போது குழந்தைக்கு எளிதாகப் புரிந்ததுடன் நேரடியாக பார்த்து வந்த அனுபவமானது படித்ததைப் புரிந்துகொள்ளவும், மறக்காமல் இருக்கவும் கைகொடுத்தது.

தொடர்ச்சியாக முன்கூட்டியே திட்டமிட்டோம். அடுத்த கல்வி ஆண்டிற்கான பாடப்புத்தகங்களை வாங்கி வைத்துக் கொண்டு அதில் உள்ள முக்கியமான இடங்கள், பறவைகள் சரணாலயங்கள், உயிரியல் பூங்காக்கள், குடவறைக் கோயில்கள், அறிவியல் மையங்கள், அணைக்கட்டுகள், நீர் வீழ்ச்சிகள் என அனைத்து இடங்களுக்கும் சென்று வந்தோம்.

இந்தமுறை குழந்தைக்கு மட்டுமல்லாமல் எங்களுக்கும் நல்ல அனுபவத்தையும் சிறந்த கற்றலுக்கும். கற்பித்தலுக்கும் உதவியது. 'காண்பனவற்றில் கல்வி' என்ற சொல்லின் பொருளை ஒவ்வொரு இடங்களாகக் கண்டு கற்று உணர்ந்தோம்.

கடந்த நான்கைந்து ஆண்டுகளாக இம்முறையைப் பின்பற்றி வருவதனால் எங்கள் கண்களுக்கு விருந்தளித்து, அறிவூட்டிய இடங்களில் முக்கியமானவை டாப்சிலிப், பரப்பிக்குளம் காட்டுக்குள் பயணம், திருமூர்த்தி நீர்வீழ்ச்சி, திருச்சி கல்லணை, மாமல்லபுரம் சிற்பக்கலை, சித்தன்னவாசல் ஓவியம், குடவறைக் கோயில், உதயகிரிக்கோட்டை வனவிலங்கு சரணாலயம், வேட்டங்குடி, வேடந்தாங்கள், சிந்தலக்குடி மற்றும் அனைத்து தமிழகப் பறவைகள் சரணாலயங்கள், மலைவாழிடங்களான ஏலகிரி, தாண்டிக்குடி. கடல்சார்ந்த இடங்களான தொண்டி படகுப்பயணம், இராமேசுவரம் அருகில் அரியமான் பீச், கண்ணாடிப் படகில் பவளப்பாறைக் காட்சி, திருச்செந்துார் அருகில் குலசேகரபட்டணம், துாத்துக்குடி வளநாடு வெளிமான் சரணாலயம், முட்டுக்காடு முதலைப்பண்ணை, ஆழப்புலா படகுவீடு, காற்றாலை அதிகமுள்ள ஆரல்வாய்மொழி இன்னும் நிறைய உள்ளது. பயணத்திட்டங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

வாய்ப்பிருந்தால், நீங்களும் குழந்தைகளின் கல்வி அறிவை மேம்படுத்திக் கொள்ளவும், உங்களுக்குள் உற்சாகத்தை அதிகப்படுத்திக் கொள்ளவும் இதுபோல் இனிமையான சுற்றுலா செல்ல முயற்சிக்கலாமே. பக்தி வழியில் காசி, இராமேசுவரம், சபரிமலை, திருப்பதி, முருகனின் அறுபடை வீடுகள், நவக்கிரகக் கோவில்கள், மேல்மருவத்துார், சமயபுரம் என அலைந்து, அறிவையும், பணத்தையும் வீணடிப்பதைவிட நமக்கும், நமது குழந்தைகளுக்கும் பயனுள்ள சுற்றுலாக்களைத் தொடங்குவோம்.

அரசூர் **அ.ப.சிவா**

# 2 நாலு பேரு நாலு விதமாப் பேசியது

## பைப் லைனும், பத்ம விபூசனும்



GAIL பைப். தமிழ்நாட்டுல மட்டும் விவசாயநிலத்துக்குள்ள வர்றதுக்கு யார் காரணம் தெரியுமா மக்களே??? சாட்சாத் பகவான் இராம பிரானே?? எப்படிநீங்களா?? பதில் கடைசியில்...

பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் இப்படி ஏதாவது ஒன்னு வாங்கியே ஆகனும் அப்படின்னு நம்ம தம்பி நாராயணமூர்த்தி போனவாரம் முழுக்க அதிபயங்கரமா நடிப்பு பயிற்சி எடுத்துட்டு. SIX BAGX, SEVEN BAGX எடுக்கறதுக்கு மருத்துவர் கிட்ட ஆலோசனை வாங்க வந்தேன்னு சொல்லி வந்தார்.

நீங்க அந்த அளவுக்கு ஒர்த் இல்லீங்க அப்படின்னு சொன்னாலும் உற்றதா இல்லை மனுசன், என்ன செஞ்சா பத்மவிபூஷன் வாங்கலாம் சொல்லியே ஆகனுமுன்னு நாற்காலியை இழுத்துப் போட்டுட்டு உட்காந்துட்டாரு

நதிகளை இணைப்பப் பத்தி நாடகம் போடணும் என்றேன். ஊருக்குள்ள வர்ற நல்ல தண்ணி பைப்பு சேரிப்பக்கம் வர்றதில்லைங்க அதுக்கு ஒரு நாடகம் இருக்கு அதுல நான் தான் நாட்டாமை என பதில் வந்தது.

உங்க பாக்கெட்டிலிருந்து ஒரு கோடி ரூபாய் தருவீங்களா?? அய்யோ ஒரு கோடிக்கு நான் எங்க போறது??? என்றவரிடம் அட! காசெல்லாம் தரவேண்டாம் அறிக்கை விட்டா போதும், சொல்லி முடிக்கும் முன் பதில் வந்தது சொத்து அழிஞ்சாலும் சொல் அழியக் கூடாதுங்க.

ஓய்வெடுக்க இமயமலைபக்கம் போற பழக்கம் இருக்குங்களா?? க்கும் இமயமலை எங்க ஈரோட்டு பக்கமா இருக்குது ஓய்வுக்கு போறதுக்கு??? சரி இதெல்லாம் செஞ்சாத்தான் பத்ம விபூஷன் வாங்க முடியாமா? நடிச்சா பத்தாதா? என்றார்..

அட!! ஆமாங்க, திரையில் மட்டுமல்ல திரைக்கு வெளியேயும் நடிக்கணும். நல்லவனா??

ஓ இதுக்கு பெயர் தான் நல்லவனுக்கு நல்லவனா??? நமக்கு சரிப்பட்டு வராதுங்க என்றபடி நடையை கட்டினார் நாராயணமூர்த்தி.

போன வாரம் நம்மூர் பக்கம் ஒரு பஞ்சாயத்துங்க. பஞ்சாயத்து போர்டு தண்ணி பைப்பு லைன் போடறது சம்மந்தமாங்க பிராது கொடுத்தது மாடசாமி. சொன்னது என்னன்னா??? அதெப்படி கந்தசாமி எடத்திலியும், முனுசாமி எடத்திலியும் ரோட்டோரமா போற பைப்பு என்ற எடத்தில மட்டும் வெள்ளாமைக் காட்டுக்குள்ள வருது.

வெள்ளாமைக் காட்டுக்குள்ள பைப்பு போனா வெவசாயம் எப்படீங்க பாக்கறது என்றான் நாட்டாமையிடம். பஞ்சாயத்தாரைப் பார்த்து இதென்னப்பா நாயம் மாடசாமி காட்டுப்பக்கம் மட்டும் பைப்ப நடுக்காட்டுல கொண்டு போறீங்க என்றார். சுத்திப் போட்டா பைப்பு நெறைய புடிக்குமுங்க என்ற பஞ்சாயத்தாரிடம்- “என்றா? நாயம் பேசறீங்க? வெள்ளாமை காடு, வெள்ளாமைக்கே பைப்ப ரோட்டோரமே போடுங்க என பத்து நிமிசத்துல கேசை முடிசிச்சுட்டாரு ..

நாட்டமை தீர்ப்பபத்தி என்ன நினைக் கறீங்க? என பக்கத்தில் நின்ன தம்பி யுவராசு கேட்டான், தீர்ப்பைப் பத்தி ஒன்னும் நினைக்கல ஆனா நாட்டாமயைப் பத்தி ஒன்னு நினைக்கிறேன். பேசாம அவுர உச்சநீதி மன்ற நீதிபதி ஆக்கிடலாம்.

முதலில் கேட்ட கேள்விக்கு பதில்.

அட ஆமாங்க இராமன் தான் காரணம். அவுரு மட்டும் கடலுக்குள்ள பாலம் போடப் போற வழியில் எங்கூருக் காட்டுல நாலு நாத்து நட்டிருந்தா நல்லா இருந்திருக்கும்.

# தைரியத்தின் அடையாளம்




இலட்சுமி அகர்வால்



பார்வதி

சைரன் வச்ச பெரிய காரும் ஒரு இளம் பெண்ணின் சின்ன காரும் குறுக்கு சந்தில் எதிர் எதிரே நிற்க சைரன் கார் சத்தம் போட அப்பெண், தைரியமாய் இறங்கிப் போய் வீரமாய்ப் பேச சைரன் கார் வழிவிட அப்பெண் பெருமிதமாய்ச் செல்கிறார்..

அட அருமை என அப்பெண்ணின் தைரியத்தைப் பாராட்டும் முன் அந்த தைரியத்துக் கான காரணமாய்ச் சொல்லப்படுவது அவர் முகத்தில் தடவியிருக்கும் சிகப்பழகு கிரீம் .

அப்பா மகளிடம் மாப்பிள்ளை வீடு, கார் என செட்டில் ஆனாவர் , திருமணம் செய்யச் சம்மதமா? எனக் கேட்க, முதலில் ஓகே சொல்லும் மகள் தோழி கொடுத்த சிகப்பழகு கிரீமை தடவியன் பின் சொல்கிறார் நானும் வீடு, கார் என செட்டில் ஆனபின் திருமணம் செய்கிறேன் என.

இதைவிடப் பெண்களை யாரும் கேவலப் படுத்தி விட முடியாது. 6-வாரத்தில் 6-மாதத்தில் எனச் சொல்லி இனி காலம் ஓட்ட முடியாது எனத் தெரிந்து கொண்ட கிரீம் கம்பனிகள் இப்பக் கையில் எடுத்திருப்பது பெண்களின் தன்னம்பிக்கை-'சிகப்பு தோலில்'என்ற கேவல மான யுக்தியை.

இப்படிப்பட்ட மோசமான விளம்பரங் களிடையே குஜராத்தை சேர்ந்த VIVA N DIVA ஆயத்த ஆடை விற்பனை செய்யும் நிறுவனம் தம் தயாரிப்புகளுக்கு மாடலாக இலட்சுமி அகர்வால் என்ற முகத்தில் அமிலம் வீசப்பட்ட பெண்ணை முன்வைத்துள்ளது தைரியத்தின் அடையாளமாக

எந்த நிறுவனமாவது சிகப்பழகுக் கிரீமைக் காட்டி உங்களின் தைரியத்தை எடைபோட்டால் காட்டிவிடுங்கள் உங்கள் தைரியத்தை அவன் முகத்தில் அமிலம் வீசி ....

அட! அப்படின்னு ஆச்சரியத்தில் ஆழ்த்தியது சமீபத்தில் நடிகை பார்வதி மேனன் அட ச்சே பார்வதியின் பேட்டி ..

தமிழில் ஏற்கனவே பார்வதி என்ற பெயரில் ஒரு நடிகை இருப்பதில் ஏற்படும் குழப்பத்திற்கு பார்வதி மேனன் சொல்லலாம் என சில அறிவு ஜீவிகள் ஆலோசனை சொல்ல ஜாதியின் பெயரை சொல்லித்தான் என்னை அடையாளப் படுத்த வேண்டியிருந்தால் அப்படி ஒரு அடையாளமே தமக்கு தேவையில்லை என பொட்டில் அறைந்த மாதிரி பதில் சொல்லி யிருக்கிறார் ..

ஹீரோயினுக்கான அம்சங்கள் உங்களிடம் இல்லையே என்ற கேள்விக்கு . நான் நடித்த படங்களை என் குடும்பத்தினருடன் நெளிவு, சுளிவு இல்லாமல் பார்க்க வேண்டும். நாளைக்கே எனக்குக் குழந்தை பிறந்தால் நான் நடித்த படங்களைப் பார்த்து விட்டு "ஏம்மா இந்த மாதிரிப் படத்துல நடிச்சே என்று அது கேட்டுவிடக்கூடாது".

பொருள்களை முதன்மைப்படுத்தாமல் வாழ்க்கையை முதன்மைப்படுத்துகிற வாழ்வியல் முறையை, பிள்ளைகளுக்கு பெற்றவர்கள் வாழ்ந்து காண்பித்து விட்டாலே போதும், ஆரோக்கியமான தலைமுறை உருவாகிவிடும். இதற்குத் தேவையில்லாத தியாகங்கள் அவசியமில்லை" என்கிறார்

மாஸ் ஹீரோக்களுடன் நடிக்க விருப்ப மில்லையா? என்றதற்கு, "ஒரு மாஸ் ஹீரோவுக்காக என்னால் அரை குறை ஆடைகளை உடுத்தி வந்து நடனம் ஆட முடியாது. ஏதோ ஒரு படத்தில் வேலை என்று என்னால் கால்ஷீட் கொடுக்க முடியாது. என் பங்கு அப்படத்திற்கு முழுமையாக இருந்தாக வேண்டும், இல்லையென்றால் அந்த வாய்ப்புகளே எனக்கு வேண்டாம். பெரிய ஹீரோக்களுடன் நடிக்கும் போது முன்னனி இடத்துக்கு வரலாம். ஆனால் திருப்தி இருக்காது. பசி வந்திவிட்டது என்பதற்காக எதை வேண்டுமானாலும் என்னால் சாப்பிட முடியாது. எனக்கான மீனுக்காக காத்திருக்க நான் தயார்" என்றார்.

வாழ்த்துகள் பார்வதி நாங்களும் தயார் உங்களின் நடிப்பை காண .

# பெங்களூர் நாட்கள்

மலையாளத்தில் ‘பெங்களூர் டேஸ்’ என்ற பெயரில் பெரும் வெற்றிபெற்ற திரைப்படம் தமிழில் பெங்களூர் நாட்களாக வந்துள்ளது. திவ்யா இராகவனாக ஸ்ரீதிவ்யா, “உலக மக்கள்தொகையில் 65 சதவீதம் பெண்கள்தான், ஆனா சொத்து உரிமை உள்ள பெண்கள் வெறும் 1 சதவீதம் தான்” என்ற வசனத்துடன் அறிமுகமாகிறார். குடும்ப ஜோசியரின் யோசனையை முட்டாள்தனமாக நம்பும் பெற்றோரால் தனது எம்.பி.ஏ கனவு தகர்க்கப்பட்டு திருமணத்திற்குச் சம்மதிக்கிறார். பெண்ணுக்கு விருப்பம் இருக்கிறதோ, இல்லையோ சமுதாயத்தின் கேள்விகளுக்குப் பயந்து கொண்டு திருமணம் என்ற அமைப்பிற்குள் தள்ளிவிடும் பெற்றோர்களைச் சரியாகக் காட்சிப் படுத்தியுள்ளனர். அந்தத் திருமணத்தில் திவ்யாவிடம், ஆர்யா பேசுகிறார்,

“இராகவன்ங்கிறவர், திவ்யாங்கிற ப்ராப்பர்ட்டிய பிரசாத்ங்கறவர்க்கு விக்கிறார். அதுக்கான ரிஜிஸ்ட்ரேஷன்தான் இந்தக் கல்யாணம்”

என்று பெண்கள் ப்ராப்பர்ட்டியாகவே இருப்பதையும், திருமண முறையில் பெண்ணின் வாழ்க்கை சமையலறைக்குப் போவதையும் இயல்பாக விளக்குகிறார்கள்.

பண்பாடு, கலாச்சாரம், மண்ணின் பெருமை, அரிசி பருப்புசாதத்தை விரும்பும் தமிழ்நாட்டின் மேற்குப்பகுதி இளைஞனைச் சரியாக அடையாளம் காட்டிவிட்டார் பாபிசிம்ஹா. இன்றைய இளைஞர்கள் நவீன ஆடைகளை அணிந்து கொண்டு, நவீன வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, தான் பயன்படுத்தும் எல்லாப் பொருட்களையும் அப்டேட் செய்து கொண்டு ட்ரெண்டியா கத்தான் இருக்கிறார்கள்.

ஆனால் திருமணத்திற்குப் பெண் என்று வரும்போது மட்டும் இன்னும் கி.பி 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இளைஞர்களைப் போல, “பெண் என்றால் ஆறடிக் கூந்தல், இலட்சணம், தமிழ்ப்பண்பாடு, கணவனை ‘அத்தான்’, ‘மாமா’ என்று அழைக்கும் நெளிவு, குழைவு என்று தான் இருக்க வேண்டும்” என்று எதிர்பார்க்கும் இன்றைய சராசரி இளைஞனாக பாபி சிம்ஹா நடிக்கிறார். இப்படிப்பட்ட கேரக்டர் உள்ள வர்கள் மனதளவில் எதிர்ப் பாலினத்தையும், பாலின சமத்துவ எண்ணத்தையும், பாலியல் அடிப்படையையும் கூடப் புரிந்து கொள்ளாமல் வளர்ந்துள்ளார்கள் என்பதை சில காட்சிகளின் மூலம் உணர்த்துகிறார்கள்.

முத்தமிடுவதை ஒரு புனிதமாகக் கருதுவது, பார்க்கில் ஒரு ஜோடி முத்தமிடுவதை வாய்பிளந்து பார்ப்பது, யாருக்கும் தெரியாமல் சைட் அடிப்பது என பண்பாட்டுக் காவலர்களின் கேரக்டரை நல்லா படமாக்கியிருக்கின்றனர். சமுதாயத்தில் காலம் காலமாக, “முள்ளு மேல இலை விழுந்தாலும், இலை மேல முள்ளு விழுந்தாலும் பாதிப்பு என்னமோ இலைக்குத் தான்” என்று பெண்களை அடக்குவதற்கு ஒரு வசனம் வைத்திருக்கிறார்கள். இந்தப்படத்தில், ப்ராய்ட்டிக்கலாக அந்த வசனத்தை “தூக்கி அடித்துவிட்டார்கள்”.

அவரது பண்புக்கு நேர் எதிராக ஆர்யா வருகிறார். தல அஜித் பில்லாவில், “என் வாழ்க்கைல ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் நானே செதுக்குனதுடா” என்பாரே, அதுபோல சமுதாயத்தின் கேள்விகளுக்குப் பதிலாக வாழாமல், தான் விரும்பும் வாழ்க்கையை வாழ்கிறார். பல படங்களில் இப்படிப்பட்ட வாழ்க்கையைக் காட்டியுள்ளனர். (எடுத்துக் காட்டாக கயல்)

சமுதாயம் நமக்கே தெரியாமல், நமது அனுமதியும் இல்லாமல் நம்மைப் பல செயல்களைச் செய்ய வைத்து விடுகிறது. ‘செட்டில்மெண்ட்’ என்ற போலி பிம்பத்தைத் திணித்து மக்களது அனைத்து இயல்பான பண்புகளையும் மாற்றிவிடுகிறது. அந்த ‘செட்டில்டு’ என்ற பிம்பத்தை நோக்கை காலமெல்லாம் நம்மை மிரட்டி வருகிறது. ஆர்யாவின் ரோலில் அவற்றைக் காட்சிப்படுத்தி இருக்கிறார்கள்.

குறிப்பாக இப்படத்தில் ஒழுங்காகப் படிக்காத, நல்ல வேலைக்குப் போக முடியாத, இன்றைய சமுதாயத்தில் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும்படியான எந்தத் தகுதியும் இல்லாத ஒருவராக வாழும் ஒருவரை, அவரது உறவினர்கள் எப்படி நடத்துவார்கள் என்பதை விளக்கமாகக் காட்டியுள்ளனர். அந்தக் கேரக்டருக்கு ஆரியா ரொம்பச் சரியா செட்டாகிறார்.



"சூசைட் பண்ணிக்கிட்ட விவசாயிங்கள விட, சூசைட் பண்ணிக்கிட்ட ஸ்டூடன்ட்ஸ்தான் அதிகம்" என்ற உரையாடலில், பிறப்பிலிருந்து இறப்புவரை ஒவ்வொரு மனிதனையும் துரத்தும் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளையும், அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாமல், சமுதாயத்தை எதிர்கொள்ள முடியாமல் நடக்கும் தற்கொலைகள் பற்றியும் சிம்பிளான வரிகளில் சொல்லியுள்ளனர்.

பார்வதி ஆர்யாவின் காதல், ரொமான்ஸின் அப்டேட்டட் வெர்ஷனாக வருகிறது. காதலிக் காதவர்களைக் காதலிக்கத் தூண்டும். அங்கிள், ஆண்ட்டிக்களுக்கு 'ப்ரேமம்' களையும் 'பூ' க்களையும் மலரவைக்கும்.




சுதந்திரமான வாழ்க்கை வாழ விரும்பிய சரண்யா ஒரு பாரம்பரிய விவசாயக்குடும்பத்தில் மாட்டிக்கொண்டு விடுகிறார். தனது மகன் பாபிசிம்ஹா சம்பாதிக்கத் தொடங்கியவுடன், பரம்பரை வீட்டையும், நில புலன்களையும் தூக்கி எறிந்துவிட்டு, இளம் வயதில் தான் விரும்பிய சுதந்திர வாழ்க்கையை வாழத் தொடங்குகிறார். சரண்யாவின் கணவராக வரும் எம்.எஸ்.பாஸ்கரும் குடும்பத்தை விட்டுவிட்டு கோவா வில் செட்டிலாகி நிம்மதியாக வாழ்கிறார். பரம்பரை வீடு, பரம்பரைச் சொத்து இவற்றின் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ள புனிதங்களையும், பிம்பங்களையும் உடைத்து எறிந்துள்ளனர்.

ராய்லட்சுமியின் ரோலை மட்டும் இறுதியில் கொச்சையாகக் காட்டுவது என்பது போன்ற சில எதிர்மறையான காட்சிகளும் உள்ளன. மொத்தத்தில் தோழர் பெரியாரின் பெண்விடுதலை, நாகரீகம், பண்பாடு பற்றிய கட்டுரைகளை இப்படம் நினைவுபடுத்துகிறது.

இந்தப் படத்திற்குப் பெரும்பலமாக இருப்பது வசனம்தான். இரத்தசரித்திரம், பயணம், உன் சமையலறையில் போன்ற படங்களுக்கு வசனம் எழுதிய த.செ.ஞானவேல் அவர்களும், உப்புக்கருவாடு படத்திற்கு வசனம் எழுதிய பொன்.பார்த்திபனும் இணைந்து வசனங்களை எழுதியுள்ளனர். அவர்களது வசனங்களுக்காக மட்டுமே நாம் பெங்களூர் நாட்களைப் பார்க்கலாம்.

அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரம் மனிதஉரிமைகளை எவ்வாறு மீறுகிறது என்பதை 'விசாரணை'யில் நேரடிக் காட்சிபோலப் பார்க்கலாம். திரைப்படம் பார்ப்பது போன்ற உணர்வை 'விசாரணை' உருவாக்காது.

சமுதாயத்திற்கும் தனி மனித சுதந்திரத்திற்கும் உள்ள உறவை பெங்களூர் நாட்களில் திரைப்படமாகப் பார்க்கலாம்.



இளமுகில்
போடோலாந்து,அஸ்ஸாம்

# பற்றி எரியட்டும் பகுத்தறிவு

மந்திரங்களும் சடங்குகளும் எல்லாப் பழங்குடி மக்களின் பரிணாமத்திலும் முக்கியமான ஒன்று. போடோ பழங்குடி மக்களும் இவற்றுக்கு விதிவிலக்கல்ல. தன்னால் எதிர்கொள்ளமுடியாத, புரிந்துகொள்ள இயலாதவற்றை - மனிதன் கட்டுப்படுத்த, தன்னைப் பாதுகாத்துக்கொள்ள, அதனைக்கொண்டு பயன்பெற உருவாக்கியதே மந்திரங்களும் சடங்குகளும்.

தூய மந்திரமும் (உற்பத்தி மந்திரம், பாதுகாப்பு மந்திரம்) தீய மந்திரமும் (அழிப்பு மந்திரம்) இன்றைய சூழலிலும் போடோ பழங்குடி மக்களிடையே இருப்பது விந்தையும் வேதனையுமே.

போடோக்கள் ஷிஜோ மரங்களையே வழிபடுகிறார்கள். போடோக்களின் அனைத்து இல்லங்களிலும் இம்மரத்தை வளர்த்து வழிபடுகிறார்கள். இதுவே இவர்களின் முதன்மைத் தெய்வம். ஷிஜோ மரங்கள் வீட்டில் இடி விழாது தடுத்து பாதுகாக்கும் என்பது நம்பிக்கை. நாம் 'அர்சுனா' என்று சொல்வது போல்.

மந்திரங்கள் பொதுவாக இருவகைப்படும். ஒன்று, ஒத்த மந்திரம். 'ஒத்தது ஒத்ததை உருவாக்கும்' என்பதே இதன் அடிப்படை கோட்பாடு. இரண்டாவது, தொத்து மந்திரம். 'ஒருமுறை தொடர்பு கொண்டிருந்தது எப்பொழுதும் தொடர்புகொண்டிருக்கும்' என்பதே இதன் அடிப்படை கோட்பாடு.

கழனியில் உற்பத்தி செழிக்க முதல் நாற்று நடுவது மைனாக்களே (பெண்களே) (இம்முறை தமிழர்களிடமும் உண்டு). கையோடு மூன்று நாற்றை எடுத்துவந்து நெற்களஞ்சிய அறையில் வைக்கிறார்கள். இது உற்பத்தியை அதிகரிக்கும் என்பது நம்பிக்கை. பெண்கள் இச்செயலைச் செய்வது ஒத்த மந்திரம் அடிப்படையிலேயே. பிள்ளை பெறுவதால் பெண் செழிப்புக்குரியவள். அவள் கைப்பட்டால் கழனியும் செழிப்புறும் என்ற நம்பிக்கை அடிப்படையிலான உற்பத்தி மந்திரமே இம்மந்திரம்.

மழையில்லாத காலத்தில், மழை பெய்ய, ஆண் பெண் தவளைகளுக்குத் திருமணம் செய்துவைத்து, நதியில் விடுகிறார்கள். இப்படியொரு திருமணம் தமிழகக் கிராமம் ஒன்றில் கண்டதாகவும், மழை பெய்ததாகவும் எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் பதிவு செய்துள்ளார்.

ஒரு சின்ன மாற்றம். திருமணமான தவளைகளை ஆற்றில் விடாமல், கிணற்றில் விட்டுள்ளனர். நம் ஆற்றில் நீர் இல்லாததால், அல்லது ஆறே இல்லாததால் கிணற்றில் விட்டிருக்கலாம். இந்த மந்திர முறை தொத்து மந்திர முறையாகும். மழைக்காலத்தில் தவளைகள் இனப்பெருக்கத்திற்காகக் கூடுவது இயற்கை. ஆகவே, இரண்டு சம்பவங்களும் தொடர்புடையவையாக உணர்ந்த பழங்குடியினர், தவளைகள் கூடினால் மழை பெய்யும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட மந்திரமே இம்மந்திரம்.

தமிழர்கள் தங்கள் உடல்நலக் குறைகள் நீங்க ஆடு, மாடு, கோழி மற்றும் பன்றிகளை பலியிடுவதைப் போல போடோக்கள் புறாக்களை வளர்த்துப் பலியிடுகிறார்கள். இதுவும் தொத்து மந்திர அடிப்படையிலான பாதுகாப்பு மந்திரமே. நோய்வாய்பட்டவள் புறாவைத் தொடுவதன்மூலம் அவளுக்குள்ள நோய் அந்தப் புறாவுக்கு இடம்பெயர்கிறது. பின் இப்புறாவைப் பலியிடுவதன் மூலம் நோய் அழிக்கப்படுகிறது என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட மந்திரமே இம்மந்திரம்.

**இந்தச் சமூகமே பெண்களைக் கொண்டாடும் சமூகம் என்பதால். திருமணத்தில் மணப் பெண்ணின் முடிவை எவரும் எதிர்ப்பதில்லை. பெற்றோர் எதிர்த்தாலும், சமூக அரங்கில் அவள் முடிவே இறுதியானது.**

இச்சமூகத்தில் பெண்ணைக் கொண்டாடுவதையும், பெண் குழந்தை பிறப்பைக் கொண்டாடுவதையும், பெண்ணை 'மைனா என்று, குடும்பத்தின் செல்வம்' என்று அழைப்பதும் 'செழிப்பு செழிப்பைத் தரும்' என்ற ஒத்த மந்திர அடிப்படையிலே என்றும் கருத்தில் கொள்ளமுடியும். பெண்ணைக் கொண்டாடுவதன் மூலம் வாழ்வு செழிக்கும் என்று இப்பழங்குடி மக்கள் நம்புகிறார்கள்.

பெண்களே குடும்பத்திற்காகப் பொருளீட்ட அதிகம் உழைக்கிறார்கள். குடும்பத்தின் முக்கிய முடிவுகளைப் பெண்கள் எடுக்கிறார்கள். இங்கு வரதட்சணை இல்லை. பெண் சிசுக் கொலை இல்லை. மேடை நாடகங்களில் நாயகர்களை விட நாயகிகளே முதன்மைப் படுத்தப்படுகிறார்கள். போஸ்டர்களில், ப்ளெக்ஸ்களில் கூட நாயகிக்கே அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

இந்தச் சமூகமே பெண்களைக் கொண்டாடும் சமூகம் என்பதால். திருமணத்தில் மணப் பெண்ணின் முடிவை எவரும் எதிர்ப்பதில்லை. பெற்றோர் எதிர்த்தாலும், சமூக அரங்கில் அவள் முடிவே இறுதியானது. ஒரு பெண் எந்த வயதிலும் தன் கணவனல்லாது வேறொரு ஆணுடன் மகிழ்ச்சியாக மக்கள் முன் நடனமாடுகிறாள். வயதுக்கு வந்த தன் மகளை அவள் தோழர்களுடன் தூர தேசத்துக்கு அனுப்பவும் பெற்றோர்கள் சிறிதும் தயங்குவதில்லை. அப்பழுக்கற்ற, அற்புதமான சூழல் இது.

கவுகாத்தியில் இருந்து போடோ-லாந்துக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வரும்போது "Stop Witch Hunting (சூனியக்காரிகளை வேட்டையாடாதீர்!)" என்ற விழிப்புணர்வுப் பலகைகளைக் காணமுடியும். பில்லி-சூனியம், பிசாசு மீதான நம்பிக்கைகள் அதிகம். அவை சமூகத்தில் ஏற்படுத்தும் எதிர் விளைவுகளும் ஏராளம்.

பில்லி-சூனியம் தீய மந்திரம் வகையைச் சார்ந்தது. பெண்களே பில்லிசூனியத்தில் ஈடுபடுகிறார்கள் அல்லது ஈடுபடுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுக் கொல்லவும் படுகிறார்கள். பொதுவாக, பிடிக்காத ஒருவருக்கு உடல் மற்றும் மனம் சார்ந்த சிக்கல்களை ஏற்படுத்த, கொல்ல இவ்வகை மந்திரங்களில் மக்கள் ஈடுபடுகிறார்கள். இவற்றில் இருவகை உண்டு.

ஒன்று, ஒத்த மந்திரம் அடிப்படையிலானது. அதாவது, பொம்மை செய்து அல்லது இறந்த மனித எலும்புகள் கொண்டு செய்வினை செய்வது. போடோ மக்களிடையே இறந்த மனித மண்டை ஓடுகள், எலும்புகள் கொண்டு செய்வினை செய்யும் முறை வழக்கத்தில் இருந்தாலும், இந்த முறை குறைவாகவே காணப்படுகிறது.

இரண்டாவது, தொத்து மந்திரம் அடிப்படையிலானது. அதாவது, பகைவரின் மயிர், உடை, காலடி மண் போன்றவை கொண்டு செய்வினை செய்வது. இம்முறை போடோ மக்களிடையே பெருதும் நம்பப்படுகிறது. முக்கியமாக இங்கு பகைவரின் வயலில் உள்ள மண்ணைக்கொண்டு செய்வினை செய்யப்படுகிறது.

திடீர் என்று நோய்வாய்ப்பட்டு, மருத்துவ பலனின்றி இறப்பவர்கள் பில்லிசூனியம் செய்து கொல்லப்பட்டதாகவும், திடீர் என்று உடல் மற்றும் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், அவ்வாறு பாதிப்புக்கு உள்ளானது பில்லி சூனியத்தால் என்றும் இம்மக்கள் நம்புகிறார்கள்.

**ஒரு பெண் எந்த வயதிலும் தன் கணவனல்லாது வேறொரு ஆணுடன் மகிழ்ச்சியாக மக்கள் முன் நடனமாடுகிறாள். வயதுக்கு வந்த தன் மகளை அவள் தோழர்களுடன் தூர தேசத்துக்கு அனுப்பவும் பெற்றோர்கள் சிறிதும் தயங்குவதில்லை.**

"நல்லா இருந்த என் அண்ணனுக்குத் திடீர்னு உடம்பு சரியில்ல. கவுகாத்தி டாக்டர், கரோடினன் அளவு 32mg/dl இருப்பதாகக் கூறினார். இது அசாதியமானது, சிறுநீரகம் முழுதும் பழுதடைந்தது, காப்பாற்றுவது கடினம் என்று கூறிய பின் அண்ணன் ஒரு வாரத்தில் இறந்தார். அண்ணன் வளர்ச்சி பிடிக்காதவர்தான் இப்படி செய்ததாகப் பின் அறிந்தோம்"என்றார் நிப்பொன்.

"அப்பாவுக்கு உடம்பெல்லாம் மஞ்சள். மஞ்சள் காமாலை வைத்தியம் பார்த்தும் சரி ஆகவில்லை. சிறுநீர் பரிசோதனை மூலம் மஞ்சள் காமாலை இல்லைன்னு தெரிஞ்சுகிட்டோம். ஆனால் உடம்பு மஞ்சளாகவே இருந்துச்சு. எங்க பெரிய தாத்தாவும் இப்படிதான் இறந்தாராம். செய்வினை இல்லாட்டி வேறென்ன?" என்றார் ஹோர்மா.

"நான் பில்லிசூனியத்த நம்புனதே இல்ல. ஆனால் மூன்று வருடம் முன்பு, என் கணவர் நல்லாதான் இருந்தார். நிறையக் குடிப்பார். மற்றபடி மனசு சுத்தம். திடீர்னு ஒரு நாள்

- தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

தோழர் பெரியார்

# மகாமகம் நடத்தக்கூடாது! 144 உத்தரவு போட வேண்டும்!



கும்பகோணத்தில் மகாமக உற்சவம் நடக்கப் போகிறது. அதற்கு திராவிட மக்களை வரும்படியாக கும்பகோணம் பார்ப்பனர்களால் அழைப்புக்கு மேல் அழைப்பு விடுத்தவண்ணமாக விளம்பரங்கள் காணப்படுகின்றன. பார்ப்பனப் பத்திரிகைகள் மாமாங்கத்தைப் பற்றி பிரமாதப்படுத்தி மக்களை அங்கு சேர்ப்பிக்க - தள்ளிவிட முயற்சிக்கின்றன.

இந்த 20 ஆம் நூற்றாண்டுக்குப் பக்கத்தில் வாழும் திராவிட மக்கள் இப்படி ஒரு அறிவும், மானமும் சூன்யமான ஒரு உற்சவத்தை மதித்துக் கும்பகோணம் சென்று கூமுட்டைகள் ஆவதென்றால் இதை உலகின் 8 வது அதிசயமென்றுதான் சொல்ல வேண்டும். கும்பகோணத்தில் இவ்வளவு கூட்டம் சேர்க்கப்படுவதற்கும் மாமாங்கத்தன்று அங்கு என்ன புதிய சங்கதி காணப்படப்போகிறது என்பதை யோசிப்போம்.

அங்குள்ள மாமாங்கக் குளம் என்பது வெகு நாளாக இருந்து வருவதேயாகும். அதில் உள்ள தண்ணீரும் வெகு நாளாக இருந்து வருவதேயாகும். அப்படி இருக்க அன்று (மக நட்சத்திரத் தினத்தன்று) மாத்திரம் அக்குளத்திற்கும் தண்ணீருக்கும் எப்படிப் புது யோக்கியதையோ, பெருமையோ உண்டாகிவிடும் என்பதை அறிவுள்ள மனிதன் யோசித்துப் பார்க்க வேண்டாமா? தமிழனின் மதி ஈனத்தை கைமுதலாக வைத்து வாழும் பார்ப்பனர் கூட்டம் தங்கள் வாழ்க்கைக்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக எதைக் கற்பித்தாலும், தமிழன் அதற்கு அடிமையாவதென்பது இழிவான காரியமல்லவா?

**பார்ப்பனர் கட்டிய கதை**

கும்பகோண மாமாங்கத்திற்குப் பார்ப்பனர் ஏற்படுத்தி இருக்கும் கதை என்னவென்பது எவரும் அறியாததல்ல.

அதாவது, சப்த நதிகளும் சிவனிடம் சென்று உலக மக்கள் தங்கள் தங்கள் பாவத்தைக் கழிப்பதற்கு ஆக தங்களிடம் வந்து குளித்து முழுகிப் பாவங்களை கழுவிவிட்டுக்கொண்டே இருப்பதால் அப்பாவங்கள் தங்களால் சுமக்க முடியவில்லை என்று அழுதார்கள். அதற்கு சிவன் அந்நதிகளைத் தேற்றி 12 வருஷத்திற்கு ஒரு முறை கும்பகோணத்திற்கு வந்து அங்குள்ள ஒரு குளத்தில் ஒரு தீர்த்தத்தை உற்பத்தி செய்கிறேன். அக்குளத்திற்கு வந்து நீங்கள் குளித்தால் உங்களின் பாவங்கள் அதில் கழுவப்பட்டுப் போகும் என்றும் சொன்னார்.

அதற்கு ஆக அந்த நதிகள் அங்கு வந்து குளித்து தங்கள் மீதுள்ள பாவங்களை அதில் கழுவி விடுகின்றன. ஆதலால் மனிதர்களும் அன்று வந்து அதில் குளித்தால் அம்மனிதர்களின் பாவமும் அங்கு கழுவப்பட்டுவிடும் என்பது புராணக் கதை. இதுதான் மாமாங்கக் கதையின் சுருக்கம்.

இதை எந்த மனிதனாவது நம்ப முடியுமா? மனிதன் உயர்ந்த ஜீவப் பிராணி என்பதற்குக் காரணம் அவனுக்கு உள்ள ஆறாவது (பகுத்தறியும்) அறிவேயாகும். அதாவது சிந்தித்துப் பார்க்கும் தன்மையே யாகும். அப்படிப்பட்ட ஆறாவது அறிவுப்படி பார்த்தால் இந்த மாமாங்கக் கதையை எந்த மனிதனாலாவது நம்ப முடியுமா என்று கேட்கின்றோம்.

## நதியில் குளித்தால் பாபம் போகுமா?

ஒரு நதியில் ஒரு மனிதன் குளித்த மாத்திரத்தில் அவனது பாபம் அதில் கழுவப்பட்டுப்போகும் (தொலையும்) என்பது எப்படி அறிவுக்குப் பொருந்தும் என்பதும், அந்த நதி அந்தப் பாவத்தை சுமக்காமல் சிவனிடம் சென்று அழுவது என்பதும், அதற்கு ஆக (அந்த நதிகளின் பாவபாரம் குறைவதற்கு ஆக) வேறு ஒரு குளத்தைக் கடவுள் சிருஷ்டிக்கிறது என்பதும், அந்தக் குளத்திற்கு இந்த (ஏழு) நதிகள் வருவது என்பதும் ஆகிய சங்கதிகள் மனிதர்களுக்குச் சொல்லக் கூடியவைகளா அல்லது மடையர்கள், மனிதத்தன்மை அற்ற, மனித உருக்கொண்ட மிருகங்களுக்கும் மரஞ்செடிகளுக்கும் சொல்லக் கூடிய கதையா என்று வாசகர்களை சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.



12 வருடத்திற்கு ஒரு முறை அந்தக் குளத்தில் நீர் பொங்கி வருவதாக நேரில் பார்த்ததாகவே சிலர் கூறுகிறார்கள். தண்ணீரை நெருப்பில் வைத்துக் காய்ச்சினாலல்லாது, பொங்குகிற வஸ்துவை அதில் போட்டாலல்லாது தண்ணீர் எப்படிப் பொங்க முடியும்? மாமாங்க தினத்தன்று தண்ணீர் குளத்தில் விட்டு வைத்த அளவுக்கு மேல் அதிகமாக காணப்படுவதாக சில பார்ப்பனர்கள் கதை கட்டிவிடுகிறார்கள்.

மக்களைத் தண்ணீருக்குள் இறங்க விடாமல் தடுத்து நிறுத்தி, பிறகு தண்ணீரைப் பார்த்தால் அப்போது அது பொங்குகிறதா இல்லையா என்பதின் உண்மை கண்டுபிடிக்க முடியும். அப்படிக் கில்லாமல் பதினாயிரக் கணக்கான மக்களை, இலட்சக்கணக்கான மக்களைக் குளிக்கவிட்டு அதன்பிறகு தண்ணீர் அதிகமாகி இருக்கிறது என்று சொன்னால் அதை எப்படித் தண்ணீர் என்றே சொல்ல முடியும்?

குளிக்கப்போகும் மக்கள் அந்தக் குளிரில் தங்கள் சிறுநீரைக் கழிக்க அந்தக் கூட்டத்தில் குளக்கரையில் எங்கு இடம் காண முடியும்? ஆதலால் குளிக்கிறவர்கள் அவசர அவசரமாகத் தண்ணீரில் இறங்கி அங்கு நீர்கழிக்க ஏற்பட்டு விடுவதன் மூலம் குளத்தின் தண்ணீர் பெருகி இருக்கலாம்; அந்தச் சிறுநீரின் தன்மையால் குளத்தில் குமிழ்கள் காணப்படலாம். குளம் தன் பாவத்தை எங்குக் கழுவும்?

அன்றியும் மக்கள் ஏராளமாகத் தண் ணீரில் இறங்குவதாலும் தண்ணீர் உயர்ந்து இருக்கலாம். இந்த மாதிரி காரணங்களால் தண்ணீர் மட்டம் 4, 2 படிக்கட்டுகளுக்கு உயர்ந்துவிட்டால் அதைப் பொங்கிற்று என்று சொல்லுவது அறிவுடைமை யாகுமா என்று கேட்கிறோம்.

அன்றியும் சப்த நதிகளுக்குமே தங்களிடம் மக்கள் கழுவிவிட்ட பாபம் தாங்காமல் அங்கு (மாமாங்க குளத்திற்கு) வந்து குளித்துப் பாவங்களைக் கழுவி விட்டு விட்டுப் போக வேண்டிய அவசியம் வந்ததென்றால், பிறகு இந்த நதிகள் கழுவிவிட்ட பாபத்தை இந்த மாமாங்கக் குளம் கழுவி விட வேறு எந்தக் குளத்திற்கு வருஷத்திற்கு வருஷம் அல்லது 12 வருஷத்திற்கு ஒரு தரமாவது அது சென்று வந்தது என்ற கேட்கின்றோம்.

**எத்தனையோ காலமாக எத்தனையோ பேர் கழுவிவிட்ட பாபங்களைக் கொண்டு வந்து கழுவிவிட்ட மாமாங்க குளப் பாவத்தண்ணீரில் மனிதன் போய் குளிப்பதானால் அவனுக்கு பாவம் ஏறுமா? அல்லது கழியுமா? என்று அறிவுடைய மக்கள் யோசிக்க வேண்டாமா?**

ஆகவே, எத்தனையோ காலமாக எத்தனையோ பேர் கழுவிவிட்ட பாபங்களைக் கொண்டு வந்து கழுவிவிட்ட மாமாங்க குளப் பாவத்தண்ணீரில் மனிதன் போய் குளிப்ப தானால் அவனுக்கு பாவம் ஏறுமா? அல்லது கழியுமா? என்று அறிவுடைய மக்கள் யோசிக்க வேண்டாமா என்று கேட்கின்றோம்.

எனவே, இந்த மாமாங்கப் புரட்டு பார்ப் பனர் பிழைக்க ஏற்படுத்திக்கொண்ட சுங்கச் சாவடி, கட்டுக்கதை அல்லாமல் இதில் ஏதாவது நாணயமோ, உண்மையோ, அறிவுடைமையோ இருக்க இடமிருக்கிறதா? இதற்குப் பார்ப்பனப்



1992 கும்பகோணம் மகாமகம் விழாவில் கூட்ட நெரிசலில் சிக்கி 48 பேர் உயிரிழந்தனர்.

பத்திரிகை உடையவும் காங்கிரஸ்காரர்களுடையவும் விளம்பரம் ஒருபுறமிருக்கக் காங்கிரஸ்காரர்கள் அதைத் தங்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யும் சூழ்ச்சி ஒருபுறம் இருக்க ரயில்வேக் காரருடைய விளம்பரம் வேறு பக்கம் இருந்து வருகிறது.

இந்த வருஷம் மாத்திரம் சண்டை நெருக்கடி காரணமாக ரயில்விட முடியாது என்று சொல்லுகிறார்கள் என்றாலும், அந்த விளம்பரத்தின் மூலம் மக்களுக்கு மா மாங்கத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு தான் வருகிறார்கள். இரயிலுக்கு எப்படியும் சென்ற மாமாங்கத்திற்கு கிடைத்த வரும்படிக்குக் குறையாமல் வரும்படி கிடைக்கத்தான் போகிறது.

இரயில்வே சிப்பந்தி பார்ப்பனர்களுக்கும் பிரைஸ் அடிக்கத்தான் போகிறது. மற்றும் பார்ப்பனர்களுக்குக் காப்பிக்கடை, ஓட்டல், தங்குமிட வசதி, பாட்டுக் கச்சேரி, சினிமா, முதலிய காரியங்களாலும், தர்ப்பணம், சங்கல்பம் முதலியவைகளாலும், மற்றும் பலசிங்காரச் சிற்றின்பக் காரியங்களாலும் இரும்பு, நூல், ஜவுளி வியாபாரிகள் அடித்த கொள்ளை லாபத்தைப் போல் லாபம் கிடைக்கத்தான் போகிறது. கடைசியில் கெட்டு நட்டமடைந்து இழிவடைந்த முட்டாளாகத் திராவிட மக்கள்தான் ஆகப் போகிறார்கள்.

**இந்த சர்க்கார் மனுதர்ம, புராண ஆட்சி சர்க்காராய் இல்லாமல் இருக்குமானால் இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களுக்கு மக்களை ஆளாக்காமல் மாமாங்கம் நடத்தக்கூடாது என்று 144 உத்தரவு போட்டு அதற்குப் பதிலாக ஒரு உலகக் கண்காட்சியை நடத்தச் செய்து இருக்கும்.**

## மனைவி மக்கள் இடிபடவா?

மற்றும் தன் மனைவி மக்களை ஒரு மீட்டிங்குக்கும் கான்பரன்சுக்கும் அனுப்பக்கூடப் பயந்து நடுங்கியவனும் உறை போட்டு அறைக்குள் பூட்டி வைத்துப் பூட்டை இழுத்து இழுத்துப் பார்த்துவிட்டு வெளியில் போய்வருகிறவனும் கூடத் தன் மனைவி மக்களை மாமாங்கத்திற்குக் கூட்டிக்கொண்டு போய் கூட்டத்தில் சிக்கவைத்து நசுக்குண்ட பஞ்சாமிர்தம் போல் ஆனதைப் பார்த்து கழுத்து பத்திரம், காது பத்திரம் என்று மாத்திரம் உரத்துக் கூறிக்கொண்டு இழுத்து வரப்போகிறான் என்பதைத் தவிர மாமாங்கத்தின் முடிவு வேறு என்னமாக இருக்க முடியும்?

இந்த சர்க்கார் மனுதர்ம, புராண ஆட்சி சர்க்காராய் இல்லாமல் இருக்குமானால் இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களுக்கு மக்களை ஆளாக்காமல் மாமாங்கம் நடத்தக்கூடாது என்று 144 உத்தரவு போட்டு அதற்குப் பதிலாக ஒரு உலகக் கண்காட்சியை நடத்தச் செய்து இருக்கும். மக்கள் மடமையாய் இருக்கும்வரை அரசருக்கும், ஆரியருக்கும் ஆதாயம் என்கிறது சாணக்கிய கொள்கை; ஆதலால் அறிவு வளர்ச்சிக்குச் சர்க்கார் தக்கது செய்யாமல் மாமாங்கம் முதலியவைகளுக்கு ஆதரவளித்து வருகிறது.

எப்படி இருந்தாலும் இந்த மாமாங்கத்திற்குத் திராவிட மக்கள் சிறப்பாகத் தமிழ் மக்கள் செல்லாமல் அதை வெறுத்துத் தள்ளி, போகிறவர்களுக்கும் விவரம் சொல்லி எவரையும் போகாமல் தடுத்துவிட வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

மாமாங்கத்தையே நம்புவது கேடு! மதிகேடு!! மதிகேடு!!! என்று சொல்லுவதோடு அங்கு செல்லுவதும் தமிழ் மகனுக்கு (திராவிடனுக்கு) மானக்கேடு! மானக்கேடு!! மானக்கேடு!!! என்று பல தடவை சொல்லுவோம்.

தோழர் பெரியார், குடிஅரசு – 17. 02. 1945,

அனுப்பி உதவியவர்:- தமிழ் ஓவியா

7ஆம் பக்க தொடர்ச்சி

வேலைக்கு போறத நிறுத்திட்டார். வேலைக்குக் கிளம்புவார். போன பஸ்லயே திரும்ப வந்துடுவார். எதுவும் நினைவு இருக்காது. இப்படியே போச்சு.யாரோ பேசுறதா சொல்வாரு. ஆனால் எங்களுக்கு எதுவும் கேக்காது. திடீர்னு தற்கொலைசெய்ய போய்ட்டார். நிறைய மருத்துவ செலவு. பில்லிசூனியம் வெளியேற்றும் சூனியக்காரியிடம் சென்றேன், திடமாக நம்பினேன். இப்ப நல்லா இருக்கோம். சந்தோசமா. இப்ப பில்லிசூனியம் மேல எனக்கும் நம்பிக்கை உண்டு'' என்றார் சோனாலி.

இப்படிப்பட்ட சம்பவங்கள் பல இச் சமுதாயத்தில் பில்லிசூனியம் மீதான நம்பிக்கைகளை வலுப்படுத்திகிறன.

மேற்சொன்ன மூன்று சம்பவங்களுக்கான அறிவியல் காரணங்களைச் சற்று ஆராய்ந்தால், சிறுநீரக க் கோளாறு (kidney failure), ஹைபெர்லிப்பிடிமியா அல்லது போர்பைரியா (hyperlipidemia or Porphyria) மற்றும் ஆடிட்டோரி ஹளுசிநேசன் (Auditory hallucination) ஆகியவை காரணிகளாக இருக்கக்கூடும். இவற்றுக்கும் இவர்கள் வாழ்வியல் முறைக்கும் அதிகம் தொடர்பு உள்ளது. அதாவது அதிகமாகப் பன்றிக்கறி உண்பதும் மது அருந்துவதும் இந்நோய்கள் வரக் காரணமாகும்.

சென்ற ஆண்டு பில்லிசூனியம் பெயரால் ஒரு குடும்பம் படுகொலை செய்யப்பட்டதை மையமாகக் கொண்டு உருவான போடோ மொழி திரைப்படம் 'தைநியாசிர்' 'தைநியாசிர்' என்றால் 'யார் சூனியக்காரி?'. போடோ மக்கள் விருப்பத்துக்குரிய படம். திடீர் என்று இறந்த ஒரு பெண்ணைச் செய்வினை செய்து கொன்றதாக - தன்னைத் தேர்தலில் வீழ்த்தியவரின் மனைவி மீதும், வீழ்த்தியவர் மீதும் பொய்ப் பழிச்சுமத்தி, பஞ்சாயத்தில் நிரூபித்துக் கொல்கிறார் வில்லன்.

அவர்களின் மகன் எப்படி, தன் பெற்றோருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்கப் போராடி வென்றார் என்பதே கதை. இத்திரைப்படம் பில்லிசூனியத்தை மூட நம்பிக்கை என்று சொல்லவில்லை. கண்டிக்கவில்லை. தங்கள் சுயநலத்திற்காக, சுய பகைமைக்காக சூனியக்காரி என்று பொய்யான பழியைச் சுமத்தி அப்பாவி மக்களைக் கொல்வதை மட்டுமே கண்டிக்கிறது.

"இச்சமூகத்தில், பழிவாங்கும் பொருட்டு பெண்கள் மீது சூனியக்காரி என்று பொய்க் குற்றம் சுமத்திக் கொல்கிறார்கள் இதையே 'சூனியக்காரியை வேட்டையாடுதல்' என்று அழைக்கிறார்கள்'' என்று காவல்துறை அதிகாரி ஒருவர் கூறினாலும், பில்லிசூனியத்தை தானும் நம்புவதாகவே அவரும் சொல்கிறார்.

விழிப்புணர்வு அறிவுப்புகள் மூலம், செய்தி கிடைத்தால் நேரில் சென்று தடுப்பதன் மூலம் சில தொண்டு நிறுவனங்கள் இவற்றை எதிர்த்து போராடுகின்றன.

எந்த மந்திரங்கள் பெண்ணைத் தூக்கிப்பிடிக்கிறதோ அதே மந்திரம் அவர்களைத் தூக்கிலிடுகிறது. மருத்துவம் மற்றும் அறிவியல் சார்ந்த கல்வியே இவர்களது இன்றைய தேவை.

**எந்த மந்திரங்கள் பெண்ணைத் தூக்கிப்பிடிக்கிறதோ அதே மந்திரம் அவர்களைத் தூக்கிலிடுகிறது. மருத்துவம் மற்றும்அறிவியல் சார்ந்த கல்வியே இவர்களது இன்றைய தேவை.**

இன்றும் மாந்திரீக மருத்துவ முறையில் நம்பிக்கை கொண்டுள்ள இம்மக்களுக்கான பொது சுகாதார நிலையம் கவலைக்கிடமாகவே உள்ளது. போதிய மருத்துவர்களிருந்தும் அவர்களின் அலட்சியப் போக்காலும், உள்கட்டமைப்பு வசதிக் குறைபாட்டாலும், செவிலியர்களின் போதிய பயிற்சியின்மை காரணத்தாலும் இந்நிலையங்கள் நிராயுதபாணியாக நிற்கிறது. நகரங்களில் உள்ள பெரிய தனியார் மருத்துவமனைகள் இச்சூழலை பயன்படுத்திக்கொண்டு பணம் பார்க்கிறார்கள்.

இங்குள்ள குழந்தைகளுக்கான கல்வியை எங்கோ எவரோ பள்ளிச் சூழலுக்கு அப்பாற் பட்டவர்களான - இங்குள்ள சமூக அமைப் பையும்,அதன் நிறை குறைபாடுகளையும் அறியாதவர்களுமான அறிஞர்கள் தீர்மானிக் கிறார்கள். மின்சார இணைப்பில்லாத பள்ளிக் கூடம், தரமான ஆசிரியர்கள் இல்லாத பள்ளிக் கூடம், இக்குழந்தைகளின் மனோநிலையை சற்றும் புரிந்துக்கொள்ளாத கல்விப்பாடம், நெடியேற்றும் ஆங்கிலம் இதுவே அரசின் கல்வி.

இங்கு, சிறகடித்துப் பறக்கும் மைனாக் களின் சிறகொடிக்கும் பேய்களை விரட்ட பூச்சாண்டிகள் வேண்டாம் பகுத்தறிவு பெரியார்களே வேண்டும்.

நன்றி: ஆ. சிவசுப்பிரமணியனின்
'மந்திரங்களும் சடங்குகளும்'



அதி அசுரன்

# எனக்கு இன்னொரு பேர் இருக்கு...

# ‘ஜாதி மாடு’

ஜல்லிக்கட்டு என்ற இந்து - ஜாதி ஆதிக்க - ஆணாதிக்கப் பண்பாட்டு விழாவை அனைத்து அரசியல் கட்சிகளும் ஓட்டுக்காக ஆதரிக்கின்றன. ஓட்டுவேட்டையாடப் போனவர்கள் ஆதரிப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. மே 17 இயக்கம், இளந்தமிழகம் இயக்கம் போன்ற ஆக்கப்பூர்வமான கடமைகளை மேற்கொள்ளும் அமைப்புகளும் ஜல்லிக்கட்டை ஆதரித்துப் போராட்டத்தில் இறங்கியது நமக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. அவர்கள் வைத்துள்ள வாதங்கள் பார்ப்பனிய ஆதிக்கத்துக்கு வழிவகுப்பதாகவே இருந்தது. அந்த வாதங்களையும் அவற்றிற்கு நமது விளக்கங்களையும் சொல்ல விரும்புகிறோம்.

தடையைப் பெறுவதற்கு நீதிமன்றத்தில் வழக்காடிய பீட்டா *People for the Ethical Treatment of Animals (PETA)* என்ற அமைப்பு மீது நமக்குக் கடுமையான விமர்சனங்கள் உண்டு. அந்த அமைப்பில் முன்னணியில் இருப்பவர்கள் பார்ப்பனர்கள், குறிப்பாக ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் பார்ப்பனர்கள் என்பது நாம் அறிந்ததுதான். ஆனால் இந்த வழக்கைப் பொறுத்தவரை வழக்காடியது பீட்டாவாக இருந்தாலும், அந்த வழக்கால் கிடைத்த தீர்ப்பு தமிழர்களின் பண்பாட்டு உயர்வுக்கு வழிவகுக்கும் என்பது உறுதி. இதே தீர்ப்பை அடிப்படையாக வைத்து நாளை இறைச்சி உணவுக்குக்கூட தடை வரலாம். வரும் போது அவசியம் எதிர்த்து நிற்போம்.

இளந்தமிழகம் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் வினோத் விடுத்துள்ள அறிக்கையில்,

> “சல்லிகட்டு போன்ற மாடுபிடி போட்டிகளில் உழவுத் தொழில், மாடு இவற்றோடு தொடர்புடைய சில சாதிகள் தான் ஈடுபடுகின்றன. வட்டாரத்தன்மையோடு அந்தந்த சாதியினர் மட்டுமே பங்கெடுக்க முடிகிறது. பெண்களின் பங்கெடுப்பே இல்லை என்று சொல்கிறார்கள். இதை சனநாயகப்படுத்தி வளர்த்தெடுக்க வேண்டுமே தவிர ’தடையே இருக்கட்டும்’ என்று கருதுவது சரியல்ல. மாடுபிடிப் பண்பாடு என்பது வெறும் ஆதிக்கவாதிகளின் பண்பாடல்ல, வேடிக்கை பார்க்கும் சமீந்தாரிய பண்பாடல்ல. விலங்குகளை அடக்கி உழவில் ஈடுபடுத்திய வரலாற்றுப் போக்கின் நீட்சி. இது உழவுத் தொழிலில் ஈடுபடும் உழைக்கும் மக்களின் பண்பாடு.”

தாழ்த்தப்பட்டவர்கள் பங்கேற்க முடிவதில்லை என்ற உண்மையை மறைக்க எவ்வளவு பாடுபடுகிறார்கள்? வட்டாரத் தன்மையோடு அந்தந்தச் சாதியினர் மட்டுமே பங்கேற்க முடிகிறதாம். ஏன் ஜல்லிக்கட்டு நடைபெறும் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களே வாழ வில்லையா?

உழவுத்தொழிலில் தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பாலும் கூலித்தொழிலாளர்களாகவே உள்ளனர். பிற்படுத்தப்பட்டோரிலும், குறிப்பாக சுமார் 20 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப் பவர்கள், விவசாயம் மட்டுமல்லாமல் கந்துவட்டி, பண்ணைகள் போன்ற உப தொழில்களால் வருமானம் பெற்றுக்கொண்டிருக்கும் வசதி படைத்த பிற்படுத்தப்பட்டவர்கள்தான் ஜல்லிக்கட்டு மாடு வளர்க்க முடியும்.

உழைக்கும் மக்களின் பண்பாடு என்றால் ஜல்லிக்கட்டு நடக்கும் கிராமங்களில் எத்தனை தலித்துகள் ஜல்லிக்கட்டு மாடு வைத்துள்ளனர் எனக்கூறுமுடியுமா? தலித்துகள் மாடு வளர்ப்பது பற்றி மனுசாஸ்திரம் கூறுகிறது,

"அவர்களுக்கு உலோக பாத்திரங்கள் கூடாது. அவர்கள் தீண்டின பாத்திரங்களைச் சுத்தம் செய்தாலும், பரிசுத்தமாகாது. அவர்கள் மாடு முதலிய வைத்துக்கொண்டு ஜீவிக்கக்கூடாது."

– அத்தியாயம் 10 ஸ்லோகம் 51

இந்த மனுசாஸ்திரக் கட்டுப்பாடுகளை மீறி தலித்துகள் இப்பொழுதுதான், ஒரு நாளைக்கு 10 லிட்டர் பால் கொடுக்கும் மாடுகளை வளர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். பால் கொடுக்காத – வருமானம் தராத – ஜல்லிக்கட்டு மாடுகளை இன்னும் தலித்துகள் வளர்க்கவே தொடங்கவில்லை. உழவுத்தொழில் உண்மையாகவே உழைக்கும் தாழ்த்தப்பட்டவரிடம் பல ஆயிரம் ஆண்டுகளாக நிலமும் இல்லை. ஜல்லிக் கட்டு மாடும் இல்லை. பிறகு எப்படி இது உழைக்கும் மக்களின் பண்பாடாக முடியும்?

பிற்படுத்தப்பட்டவர்களிலும் 2 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை வைத்திருக்கும் சராசரி விவசாயிகள் தான் அதிகம். அவர்களால் வருமானம் வராத எந்த உயிரையும் வளர்க்க முடியாது. வீட்டில் உள்ள ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் வயலில் வேலை செய்தால்தான் பட்டினி இல்லாமல் வாழமுடியும் என்ற நிலையில்தான் இன்றைய விவசாயம் உள்ளது. இந்த நிலையில் ஜல்லிக்கட்டு மாட்டை வளர்க்கும் வலிமை பொருளாதாரத்திலும் வலுவானவர்களுக்கே உண்டு.

குறிப்பிட்ட சில கிராமங்களில் பணத்திமிரும், ஜாதித்திமிரும் கொண்ட ஒரு சிலரால் நடத்தப்படும் இந்த விளையாட்டை ஒட்டுமொத்தத் தமிழர்களின் பண்பாடு என்று கூறுவீர் களானால், இங்கு 90 விழுக்காட்டு மக்கள் தமிழர்களே இல்லை என்று கூறும் நிலைதான் ஏற்படும். மேலும் இளந்தமிழகம் இயக்கம் கூறுகிறது,

"(ஜல்லிக்கட்டு) ஒரு வட்டார ஒரு சாதிப் பண்பாடேயானாலும் அதுவும் பன்மைத் துவம் கொண்ட ஒரு சமூகத்தின் ஒரு கூறுதான். எல்லாத் தரப்பு, வட்டார, சாதி பண்பாடு களையும் உட்செரித்துதான் பன்முகத் தன்மையோடு தேசப்பண்பாடு, சமூகப்பண்பாடு வளர்ச்சிபெறுகிறது. அது சல்லிகட்டு, ஏறுதழுவல், மஞ்சுவிரட்டு போன்ற அனைத்து மாடுபிடி போட்டிகளைக் கொண்டாடும் பண்பாட்டையும் சேர்த்துதான்."

வினோத்,செய்தித் தொடர்பாளர்,
இளந்தமிழகம் இயக்கம். 09.01.2015

பன்முகத் தன்மை என்ற பெயரில், எந்தவிதக் குற்றஉணர்வும் இல்லாமல் – சிறிதும் கூச்சப்படாமல் – ஜாதி ஆதிக்கத்தை நியாயப்படுத்துகின்றன மேற்கண்ட வரிகள். நான் ஆதிக்க ஜாதிக்காரன் என்று திமிராகப் பூணூல் போட்டுத் திரியும் பார்ப்பானின் போக்கும், இந்த வரிகளின் பொருளும் ஒன்றுதான். மேற்கண்ட வரிகளை சமுதாயத்தில் உள்ள அனைத்துச் சீரழிவுப் பழக்க வழக்கங்களைக் காப்பதற்கும் பயன்படுத்தலாம்.

**நாட்டுப் பசுக்களைக் காப்பாற்றத்தான் பீட்டாக்களும், பார்ப்பன அமைப்புகளும், இந்து அமைப்புகளும், தமிழ்த்தேசிய அமைப்புகளும், தமிழீழத்திற்காகவே நடத்தப்படும் அமைப்புகளும் பாடுபடுகின்றன. நாட்டு எருமைகளைக் காப்பாற்றுவது குறித்து எவருக்கும் எந்தக் கவலையும் கிடையாது.**

பிறக்கும்போதே சேரியில் வாழவைப்பது, ஒரு ஊரின் அனைத்து நல்லது கெட்டதுகளிலும் ஒதுக்கி வைப்பது, இறந்தபிறகும் சுடுகாட்டிலும் பறையர் சுடுகாடு, பள்ளர்சுடுகாடு, படையாட்சி சுடுகாடு எனப் பிரித்து வைத்திருப்பது என அனைத்துமே இங்கு பண்பாடு, பழக்க வழக்கம்தானே? இதையெல்லாம் உட்செரித்துத்தான் உங்கள் தேசத்தின் பண்பாடு வளர்ச்சி பெறும் என்றால் அப்படிப்பட்ட தேசம் உருவாவதற்கும், அப்படிப்பட்ட பன்முகத்தன்மை உருவாவதற்கும் மனித குல வளர்ச்சியில் அக்கறை உள்ளோர் அனைவரும் எதிரிகளாகத்தான் இருப்பார்கள்.

பண்பாடு, பழக்கவழக்கங்களை மாற்ற முடியாது என்பதுதானே ஆகமங்கள்? இந்தப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் தானே இந்து லா வில் பாதுகாக்கப்பட்டு, இன்று பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அர்ச்சகராக நியமிக்க முடியாத நிலை நீடிக்கிறது. இந்து தேசியமோ, தமிழ்த்தேசியமோ எது வருவதானாலும் ஜாதி – அப்படியேதான் இருக்கும் என்பதைத்தான் உங்கள் அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

## ஜனநாயகப் படுத்த வேண்டாமா?

முகநூலில் இதுபற்றிய விவாதங்கள் எழுந்தபோது, மே 17 இயக்கத்தின் சார்பாகச் சிலர் ஒரு பதிவை வெளியிட்டனர். அதாவது, கோவில்களில் தீண்டாமையும், ஜாதியும், பெண்ணடிமைத் தனமும் கடைபிடிக்கப்படுகிறது. ஆனால் அவற்றை நன்கு அறிந்திருந்த தோழர் பெரியார், அவற்றைத் தடைசெய்ய வேண்டும் என்றா கூறினார்? அவற்றை ஜனநாயகப்படுத்தவே முயற்சித்தார். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற போராட்டம் கோவில்களை ஜனநாயகப் படுத்தும் முயற்சிதானே? என்று வாதிட்டார்கள். இளந்தமிழகமும் ஜல்லிக்கட்டை ஜனநாயகப் படுத்த வேண்டும் என்கிறது.

ஜனநாயகப்படுத்துவது என்றால், நாராயணகுருவைப்போல பெரியாரும் ஆங்காங்கே சிவன்கோவிலை உருவாக்கியிருப்பார். இராமானுஜரைப் போல அனைத்து ஜாதியினருக்கும் நாமத்தைப் போட்டுவிட்டிருப்பார். இதோ பெரியாரே கூறுகிறார்,

> “இராமானுஜர் நாமத்தையும், பூணூலையும் பழைய சின்னம் என்பதாகக் கருதி அதை வைத்துக் கொண்டு 'பறையன்' என்பவர்களையெல்லாம் பிடித்து நாமமும், பூணூலும் போட்டு மக்களைச் சமத்துவம் அடையச் செய்வது என்பதான சீர்திருத்தம் செய்தார் என்பதாகச் சொல்லப்படுகின்றது. இதனால் பழைய சின்னம் காப்பாற்றப்பட்டதே தவிர, மக்களுக்கு சமத்துவம் கிடைத்ததா? சமத்துவ உணர்ச்சி உண்டாயிற்றா? நாமமும் பூணூலும் உடையவர்களுக்குள்ளாகவே உயர்வு தாழ்வும், அதுகள் இல்லாதவர்களை தாழ்மையாய்க் கருதுவதும் இன்று சூரியன் போல் துலங்குகிறது”. - குடி அரசு 02.12.28

எனவே ஜனநாயகப்படுத்துவது, சீர்திருத்துவது என்பதில் பெரியாருக்கு என்றுமே உடன் பாடில்லை. கருவறை நுழைவுக் கிளர்ச்சியில்கூட பெரியாரின் நோக்கம், முரண்பாடுகளைக் கூர்மையாக்குது என்பதுதான். பகைமுரணை அடையாளப்படுத்துவதுதான் பெரியாரின் நோக்கம். கோவில் நுழைவில் பெரியாரின் நிலையைக் காண்போம்.

> “இந்தப் பொதுக்கோவிலுக்குள் எல்லோருக்கும் செல்ல உரிமை உண்டு” என்று விளம்பரம் செய்ய வேண்டும். யாராவது ஆக்ஷேபித்தால் அவர்களைச் சிறையிலிட வேண்டும். இதைப் பொது ஜனங்கள் கூட்டம் போட்டுக் கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே கோவிலை இடித்தெறிந்து விடவேண்டும்.
>
> ஜாதி வித்தியாசமோ, உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்று சொல்லிவிட வேண்டும். மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்யவேண்டும். உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிடவேண்டும். பொதுஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளை தீவாந்திரத்திற்கு அனுப்பிவிடவேண்டும். சுவாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து அவைகளை விற்று படிப்பில்லாதவர்களுக்கு படிப்பும், தொழில் இல்லாதவர்களுக்கு தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப்படுத்திவிடவேண்டும்.” குடி அரசு 09.12.1928

கோவில்களில் தீண்டாமை என்றால் அவற்றை இடித்துத் தள்ள வேண்டும், மடங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று முழங்கியவர் பெரியார். கிராமங்களில் ஜாதிமுறை தீவிரமாகக் கடைபிடிக்கப்படுகிறது என்பதற்காக அந்த கிராமம் என்ற முறையையே எதிர்த்தவர் பெரியார். கிராமங்கள் அழிய வேண்டும் என்றவர் பெரியார். அந்த கிராம முறையை 'ஜனநாயகப்படுத்த வேண்டும்' என்று 'பூண்' பிடித்துக் கொண்டிருக்கவில்லை.

பார்ப்பனர்களின் பண்பாட்டு விழாவான கும்பகோணம் மகாமகம் பற்றிப் பெரியார் பலமுறை தனது குடி அரசில் எழுதியுள்ளார். அந்த விழாவை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. தடை போட வேண்டும் என்றுதான் முாங்கினார்.

> “இந்த சர்க்கார் மனுதர்ம, புராண ஆட்சி சர்க்காராய் இல்லாமல் இருக்குமானால் இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரி யங்களுக்கு மக்களை ஆளாக்காமல் மாமாங்கம் நடத்தக்கூடாது என்று 144 உத்தரவு போட வேண்டும்.”
>
> - குடி அரசு - 17.02.1945

சீர்திருத்தத்தில் நம்பிக்கை அற்றவர் பெரியார். தன்னை அழிவுவேலைக்காரன் என்றுதான் அறிவித்துக்கொள்கிறார். குறிப்பாக, தற்போது உள்ள பிரச்சனை என்னவென்றால், ஜல்லிக் கட்டுக்குத் தடை அறிவிக்கப்பட்டு விட்டது. அதுபோல,

நாளையே ஒரு அறிவுள்ள அரசாங்கம் உருவாகி, “கோவில்கள் அனைத்தும் இழுத்து மூடப்படும்; தடைசெய்யப்படும்” என அறிவிக்கிறது என வைத்துக்கொள்வோம். அப்போது, கோவில்கள் என்பவை நமது பண்பாட்டின் அடையாளம், அந்தத் தடையை நீக்க வேண்டும் என எந்தப் பெரியாரியலாளரும் போராட மாட்டார்கள்.

**ஜல்லிக்கட்டு ஆண்டுதோறும் நடந்துகொண்டிருந்த போதே இப்படி இலட்சக்கணக்கில் ஒரு இனம் அழிந்துள்ளது என்றால், காங்கேயம் காளைகள் அழிந்ததற்கு ஜல்லிக்கட்டு ஒரு காரணமாக இல்லை என்பது தெளிவாகிறது.**

அதுபோல இப்போது நாம் போராடாமலேயே ஜல்லிக்கட்டு என்ற ஆதிக்கப் பண்பாட்டிற்குத் தடை வந்துவிட்டது. அதை வரவேற்பதுதான் தமிழர்கள் அறிவியல் அணுகுமுறையோடு வாழ வேண்டும் என விரும்புபவர்கள் செய்ய வேண்டிய பணி.

குழந்தைத் திருமணத் தடுப்புச்சட்டம், உடன்கட்டை ஏறுதல் தடுப்புச் சட்டம், நரபலித் தடுப்புச்சட்டம் எனப்பல சட்டங்களைக் கொண்டு வந்தது இந்தியாவில் வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள்தான். இந்தத் தடுப்புச்சட்டங்கள் வருவதற்கு முன் நரபலியும், உடன்கட்டை ஏறுதலும், குழந்தை மணமும், தேவதாசிமுறையும் இந்தத் தமிழ்த்தேசத்தின் பண்பாடுகள்தான்; இந்தியப் பகுதியில் உள்ள பல தேசிய இனங்களின் பண்பாட்டு அடையாளங்கள் தான்.

ஆனால் அவற்றுக்குத் தடை வந்தபோது, அந்தத் தடைகளால் ஒருவேளை ஆங்கிலேயர் களுக்கும் பலன் இருந்திருக்கலாம். அதற்காக அந்தத் தடைகள் தவறு. அவை தேசிய இனங்களின் மீதான தாக்குதல் என்று குரல் கொடுத்தால் அது யாருக்கான குரலாக இருக்கும்? அதே போன்ற நிலையைத்தான் தற்போது மே 17, இளந்தமிழகம் இயக்கங்கள் எடுத்துள்ளன.

பூப்புனித நீராட்டுவிழாவும், தாய்மாமனையே மணந்துகொள்வதும், அகமண முறையும் இதே ஜல்லிக்கட்டு கிராமங்களில் உள்ள மற்றுமொரு முக்கியமான பண்பாடுதான். எதிர்காலத்தில் ஏதோ ஒரு துணிவுள்ள அரசாங்கம் உருவாகி, இந்தப் பண்பாடுகளுக்குத் தடை விதித்தால், அந்தத் தடையை வரவேற்பதுதானே, அறிவும், மானமும் உள்ளவர்கள் செய்ய வேண்டிய செயல்? அதை விட்டுவிட்டு, 'அகமண முறையும், பூப்புனித நீராட்டுவிழாவும் எங்கள் சமுதாயத்தின் பன்முகத் தன்மையின் கூறு' என்று அறிக்கை விட்டால் இது இளந்தமிழகமா? பழந்தமிழகமா? என்ற கேள்விதான் வரும். அந்தக் கேள்விதான் இப்போது நமக்கு எழுகிறது.

### மாட்டிறைச்சிச் சந்தைக்கு ஜல்லிக்கட்டு எதிராக உள்ளதா?

“மாட்டிறைச்சிச் சந்தைக்கு ஜல்லிக்கட்டு எதிராக உள்ளது” “நாட்டு மாடுகளுக்கு வெளி நாடுகளில் நல்ல சந்தை மதிப்பு இருக்கிறது. ஜல்லிக்கட்டுக்குத் தடை வந்தால் அவை இறைச்சிச் சந்தைக்கு வரும், இந்தத் தடையின் பின்னணி இதுதான்” என மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் புதிய தலைமுறையின் நேர்படப் பேசு நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

ஜல்லிக்கட்டின் மீதான தடையைக் கண்டித்து 13.01.2016 ல் சென்னை சாஸ்திரி பவன் அலுவலகம் மே பதினேழு இயக்க தோழர்களால் முற்றுகை யிடப்பட்டது.பன்னாட்டு கார்ப்பரேட் வணிகத்திற்காக நாட்டு மாடுகளை அழிக்கவும், தற்சார்பு விவசாயத்தை அழிக்கவும், தமிழ்த்தேசிய இன மக்களின் பண்பாட்டின் மீது அடக்குமுறையாக கொண்டு வரப்பட்ட இந்தத் தடையை கண்டிப்பதற்காக இந்த முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஜல்லிக்கட்டுக்காக மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுபவை காங்கேயம் காளைகள். அவை களுக்காகவே ஒரு ஆராய்ச்சி மய்யத்தை நடத்தி வரும் காங்கேயத்தில் உள்ள, சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மையப் பொறுப்பாளர் கே.எஸ்.எம்.கார்த்திகேயன் அவர்கள் 2013 ல் தினமணிக்கு அளித்த நேர்காணல் ஒன்றைப் படிப்போம்.

> “காங்கயம் இனக் காளை கண்காட்சி ஆண்டுதோறும் நடத்தி வருகிறோம். 1990 ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 11 லட்சம் மாடுகள் இருந்தன. 2000 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 4 லட்சம் மாடுகள் இருந்தன. 2010 ம் ஆண்டு கணக்கெடுப்பு நடைபெற வில்லை.

கணக்கெடுப்பு நடைபெற்றிருந்தால், சுமார் 2.5 லட்சம் மாடுகள் மட்டுமே இருப்பது தெரியவரும்''. - 11.02.2013 தினமணி

1990 முதல் 2013 வரை தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வந்ததை நாம் அறிவோம். ஆக 2013 வரை ஜல்லிக்கட்டுக்கு எந்தச் சிக்கலும் இல்லை. அப்படியானால் 1990 ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 11 இலட்சம் காங்கேயம் காளைகள், 2000 லேயே திடீரென எப்படி 4 இலட்சம் எனக் குறைந்தது? அடுத்த பத்தாண்டுகளில் 2010 ல் 2. 5 இலட்சமாக எப்படிக் குறைந்தது? அப்போதெல்லாம் ஜல்லிக்கட்டு நடந்துகொண்டுதானே இருந்தது? ஜல்லிக்கட்டு ஆண்டுதோறும் நடந்துகொண்டிருந்த போதே இப்படி இலட்சக்கணக்கில் ஒரு இனம் அழிந்துள்ளது என்றால், காங்கேயம் காளைகள் அழிந்ததற்கு ஜல்லிக்கட்டு ஒரு காரணமாக இல்லை என்பது தெளிவாகிறது.

மேலும், நாட்டு மாடுகளுக்கு வெளிநாட்டில் இறைச்சிச் சந்தையில் நல்ல மதிப்பு இருப்பதால் ஜல்லிக்கட்டுத் தடை என்கிறார் திருமுருகன். உண்மைதான். ஆனால் அந்த மதிப்பு இந்திய நாட்டில் உள்ள நாட்டுப்பசுக்களுக்குக் கிடையாது. நாட்டு எருமைகளுக்குத் தான் மிக நல்ல இறைச்சிச்சந்தை வாய்ப்பு உள்ளது.

Agricultural and Processed Food Products Export Development Authority (APEDA) என்ற மத்திய அரசு நிறுவனத்தின் புள்ளிவிபரங்களைப் பார்க்கலாம். 2014 - 2015 ஆண்டில் 14,75,526.01 மில்லியன் டன் எருமை இறைச்சி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 29,282.6 கோடி ரூபாய்க்கு வணிகம் நடந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவை அனைத்தும் எருமைகள் தான் என்பதற்கும் APEDA விளக்கம் தந்துள்ளது.

இந்தியாவிலிருந்து பசு இறைச்சியை ஏற்றுமதி செய்ய அனுமதி இல்லை என்று மாட்டிறைச்சி ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள புதுடில்லியைச் சேர்ந்த அல்நூர் நிறுவனமும் தெரிவித்துள்ளது. 30.10.2015 நாளிட்ட The Economic Times ஏட்டில் விளக்கமான செய்திகள் வெளியாகி உள்ளன.

காங்கேயம் காளை எருமை வகையில் வராது என்பது மாடு பற்றிய அடிப்படை அறிவு உள்ளவர்கள் அனைவருக்கும் தெரியும். ஜல்லிக்கட்டில் எந்த ஊரிலும் எருமைகளை அடக்குவது கிடையாது என்பது நாம் அனைவருக்கும் தெரியும்.

**நாட்டு மாடுகளின் அழிவு இனிமேல் தானா?**

1970 லேயே நாட்டு மாடுகளுக்கு அழிவு தொடங்கிவிட்டது. அப்போது தொடங்கிய வெண்மைப்புரட்சியின் முக்கியப் பணியே நாட்டுமாடுகளை கலப்பு மாடுகளாக மாற்றி பால் உற்பத்தியைப் பெருக்கியது தான்.

National Dairy Development Board (NDDB) என்ற மத்திய அரசு நிறுவனம் வர்கீஸ் குரியன் தலைமையில் 1970 ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் ஆனந்த் மாவட்டத்தில் மிகப் பெரிய பால் பண்ணைத் திட்டத்தைத் தொடங்கியது. Ananth Milk Union Ltd ( AMUL ) என்பது அதன் வணிகப் பெயர். அத்திட்டம் தொடங்கிய பிறகு, நமது நாட்டு 'போஸ் இண்டிகஸ்' பசுக்களையும் வெளிநாட்டுப் பசு வகைகளான ஜெர்ஸி, ஹோல்ஸ்டின் ஃபிரீசியன், அயர்ஷயர் போன்ற பசுக்களையும் இணைத்து விவசாயிகளுக்கு இலாபகரமான கலப்பினப்பசுக்கள் உயிராக்கப்பட்டன.

**கலப்பினப் பசுக்கள் இந்திய நாட்டின், தமிழ்நாட்டின் வெப்ப நிலைக்குத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு வாழத் தொடங்கி 45 ஆண்டுகள் முடிந்து விட்டன...இப்போது வந்து 'நாட்டுமாடுகளைக் காப்பாற்றுவோம்' என முழக்கம் இடுவது இந்து - பார்ப்பன நலன்களுக்குத்தான் வழிவகுக்கும்.**

அந்நிறுவனத்தின் வெற்றி, இந்தியா முழுவதிலும் கூட்டுறவுப் பால்பண்ணைகள் உருவாக வழிவகுத்தது. 01.02.1981 ல் தமிழ்நாட்டில் AAVIN ஆவின் உருவாக்கப்பட்டது. இதுபோன்ற கூட்டுறவுப் பண்ணைகளின் வளர்ச்சி நாட்டு மாடுகளை முற்று முழுதாக கலப்பின மாடுகளாக மாற்றிவிட்டன. அந்தக் கலப்பினங்கள் இந்திய நாட்டின், தமிழ்நாட்டின் வெப்ப நிலைக்குத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு வாழத் தொடங்கி 45 ஆண்டுகள் முடிந்து விட்டன. அவை இன்று தமிழ்நாட்டின் மாடு என்ற இனத்தின் அடையாளமாகவும், 10 கோடித் தமிழர்களுக்குப் பாலை வழங்கிக் கொண்டும் உள்ளன. இப்போது வந்து 'நாட்டுமாடுகளைக் காப்பாற்றுவோம்' என முழக்கம் இடுவது இந்து - பார்ப்பன நலன்களுக்குத்தான் வழிவகுக்கும்.

நாட்டுமாடுகளா? ஜாதி ஒழிப்பா? என்றால் நாம் ஜாதி ஒழிப்பு என்ற இடத்தில்தான் நிற்க வேண்டுமே தவிர நாட்டு மாடுகளைக் காக்கும் இடத்திற்குப் போவது - ஜாதி ஒழிப்பை முதன்மையாகக் கொண்டவர்கள் செய்யக்கூடாத செயல் ஆகும்.

**நாட்டு மாட்டுக்கு இன்னொரு பெயர் இருக்கிறது..... 'ஜாதி மாடு'**

இந்த நாட்டு மாடுகளுக்கு இன்னொரு பெயர் இருக்கிறது. அது தான் 'ஜாதி மாடுகள்' இந்த ஜாதி மாடுகளைக் காப்பாற்றத்தான் ஜாதி இந்துக்கள் போராடி வருகின்றனர். அதனால்தான் மனு வின் காலம் முதல் இந்த ஜாதி மாடுகளை தாழ்த்தப்பட்ட ஜாதிக்காரர்கள் சொந்தமாக வளர்க்க முடியாத சமுதாயச் சூழல் இருந்தது.

இந்தியாவில் மனிதர்களுக்குள் ஜாதிக்கலப்பை அனுமதிக்காதவர்கள் தான் மாடுகளுக் குள்ளும் ஜாதிக்கலப்பை அனுமதிக்காமல் - நாட்டுமாடுகளைக் காப்பாற்ற வேண்டுமெனப் போராடுகிறார்கள். அதுவும் குறிப்பாக நாட்டுப் பசுக்களைக் காப்பாற்றத்தான் பீட்டாக்களும், பார்ப்பன அமைப்புகளும், இந்து அமைப்புகளும், தமிழ்த்தேசிய அமைப்புகளும், தமிழீழத்திற்காகவே நடத்தப்படும் அமைப்புகளும் பாடுபடுகின்றன. குறைந்த விலை சத்துணவான பசு மாட்டுக் கறியை உண்ணும் அடித்தட்டு மக்களைப் பற்றியும்-நாட்டு எருமைகளைக் காப்பாற்றுவது குறித்தும் எவருக்கும் எந்தக் கவலையும் கிடையாது.

ஆண்டுக்கு 20 இலட்சம் டன் அளவுக்கு வெட்டிக் கொல்லப்பட்டு - ஆண்டுக்கு 30,000 கோடி ரூபாய்க்கு வணிகம் நடக்கும் எருமை இறைச்சிச் சந்தையில்தான் கார்ப்பரேட் கம்பெனிகள் வலம் வருகின்றன. அதை எதிர்த்து எவரும் பேசக்கூட இல்லை. ஆனால், உழைக்கும் மக்களுக்குச் சிறிதும் பயன்படாத - காங்கேயம் பசுக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் உச்சநீதிமன்றத் தடைகளை யெல்லாம் மீறிக்கூடப் போராடுவார்கள்.

நாட்டுப் பசுக்களைக் காப்பாற்ற ஆர்.எஸ்.எஸ் காரர்களும், இராமகோபாலன்களும், சங்கர மடங்களும், கோசாலைகளும் இருக்கின்றன. அவர்களுக்குத் தோள் கொடுக்க - மக்கள் விடுதலை அமைப்புகளாக நாம் நம்பும் இயக்கங்கள் செல்ல வேண்டாம்.

புரட்சிகர இயக்கங்களின் போக்கு இப்படி என்றால், இந்நாட்டு இயற்கை விவசாய ஆர்வலர்கள் என்ற வேடத்தில் இருப்பவர்களின் போக்கு இன்னும் கூடுதலாக, பார்ப்பன அடிமைப் போக்காக இருக்கிறது. போலி அறிவியல் கருத்துக்களை நவீன அறிவியல் ஆராய்ச்சி என்ற பெயரில் அள்ளிவிட்டுக் கொண்டிருக்கின்றனர். ஜல்லிக்கட்டுப் பிரச்சனையிலும் அப்படி ஒரு போலி அறிவியல் கருத்து பரப்பப் பட்டுள்ளது. அதாவது பாலில் ஏ1 பால், ஏ 2 பால் என்ற கருத்து. அந்தக் கருத்துப்பரப்பலில் இருக்கும் மோசடியை அடுத்த இதழில் பார்ப்போம்.

- தொடரும்


## குழந்தைகள் வாழ்க்கைக் கல்விப் பயணம்

புத்தகங்களில் அச்சாகி இருக்கும் தகவல்கள் - நான்கு சுவர்களுக்குள் - மூச்சு முட்டும் கட்டுப்பாடுகளை விதிக்கும் ஆசிரியர்களால் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. 10ஆம் வகுப்பில் 400க்கு மேலே மதிப்பெண், 12ஆம் வகுப்பில் 1000 க்கு மேலே மதிப்பெண் என சமுதாயத்தால் விரட்டப்பட்டுக்கொண்டே வாழ்கிறோம். இவற்றில் நமக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், சமுதாய அமைப்பில் மாற்றங்கள் வரும் வரை இந்தக் கோழிப்பண்ணைப் படிப்புகளும், குதிரைப் பந்தய ஓட்டமும் நம்மை வளப்படுத்திக்கொள்ளத் தேவைதான்.

சமுதாயத்திற்காக ஒரு ஆண்டின் அனைத்து நாட்களையும் செலவிடுகிறோம். நமக்காக - நமது மன வளத்தை உயர்த்திக்கொள்வதற்காக - நமது அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவதற்காக - வாழ்க்கைக்கான கல்வியைக் கற்பதற்காக - சில நாட்களையாவது தேர்ந்தெடுப்போம்.


உணவு, உடைத்தேவைகளுக்கு அடிப்படையான விவசாயம், ஆடைத் தேவைக்கு அவசியமான ஆடை உற்பத்தி, இரண்டுக்கும் தேவையான மின்சார உற்பத்தி, அன்றாடத் தேவையான உணவுத்தயாரிப்பு, சக உயிர்களை மதிக்கத் தேவையான பாலின சமத்துவம், இவை அனைத்துக்கும் அடிப்படையாக இருக்க வேண்டிய அறிவியல் அணுகுமுறை ஆகியவற்றை நேரடிகாட்சிகளாக - சுற்றுலாவாகச் சென்று அறிந்து கொள்ள - ஒரு 5 நாட்களைச் செலவிடுவோம்.

2016 மே 12 - 16 ஆகிய 5 நாட்கள் குழந்தைகள் வாழ்க்கைக்கல்விப் பயணம் - நன்கொடை : ஒருவருக்கு ரூ1500 (உணவு, தங்குமிடம், பயணக்கட்டணம் உட்பட) 8 முதல் 15 வயது வரை உள்ளவர்கள் மட்டும் பங்கேற்கலாம். பெற்றோர்களும் வரலாம். அவர்களுக்கான கட்டணம் ரூ 2500. ஏப்ரல் 15 க்குள் பாதித் தொகையைச் செலுத்தி வருகையை உறுதிசெய்யுங்கள். தொடர்புக்கு :

**ஆசிரியர் இரஞ்சிதா-96985 83697, மருத்துவர் பெரியார்செல்வி-98656 30383 , மலரினியன்-98947 03804**

■ Team Life Science ■

கிருபா நந்தினி
சூழலியல் ஆய்வாளர்



2

# காலநிலை மாற்ற பாதிப்பு

## மன்னார் வளைகுடாவில் இருந்து கூடங்குளம் வரை

1700 களில் தொழிற்புரட்சிக்குப் பின் தொழிற்சாலைகள் பெருகத் தொடங்கியது. இதன் விளைவால் நிலப்பற்றாக்குறை, மரங்களை வெட்டுதல், காடுகள் அழிப்பு இவை அனைத்தும் அதிகரித்தன. அனைத்து வளர்ச்சிகளுக்கும் நிகராக ஆபத்துகளும், அழிவுகளும் கூடவே வளரத் தொடங்கின. காரணம், இத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருட்கள் அனைத்தும் இயற்கையில் இருந்து கிடைக்கும் மரம், நீர் மற்றும் பிறவற்றை நம்பி இருந்தன. காலம் கடக்கக் கடக்க மனிதனுக்கு ஆசையும், பேராசையும் மேலும் வளர்ச்சிகளை நோக்கியே இருந்ததால் இயற்கை வளங்களைச் சுரண்டத் தொடங்கினான்.

ஒருபுறம் தொழில் வளர்ச்சிகள் அதிகரிக்க, மக்கள் வாழ்க்கையும் அதனுடன் சேர்ந்து இயற்கையிலிருந்து விடுபட்டு இயந்திரத் தனமாகவே மாறிப் போயின. அதன் விளைவாக மரங்களின் எண்ணிக்கை, மக்கள் தொகைப் பெருக்கம், அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், அனைத்தும் பாதிக்கப்பட்டு மழை, வறட்சி, நீர், கனிம, கரிம, வளங்கள் அனைத்தும் மாறிப்போயின.

இம்மாற்றம் பூமியின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்து, உயிரினங்கள் வாழ இயலாதச் சூழலை உருவாக்கியிருக்கிறது. குறிப்பாகப் புதைப்படிவ எரிபொருட்களின் பயன்பாட்டுப் பெருக்கத்தால் இந்தச் சீரழிவு வெகு வேகமாக நடைபெற்று வருகிறது. இது நூறு விழுக்காடு மனிதச் செயற்பாடுகளால் மட்டுமே அதிகரித்துள்ளது என்பதுதான் உண்மை. இதன் விபரங்கள் கீழ்கண்டவாறு அமைந்துள்ளன.

மின்சாரம் உற்பத்திக்காக 31 விழுக்காடும், போக்குவரத்துப் பயன்பாட்டுக்காக 27விழுக்காடு, தொழிற்சாலைகளுக்காக 21விழுக்காடு என 79 விழுக்காடு சீரழிவை இந்த மூன்றே துறைகள் மூலம் ஏற்படுத்துகிறோம். குடியிருப்புகள் 12 விழுக்காடும், விவசாயப் பயன்பாடு 9 விழுக்காடுமாக இணைந்து 21 விழுக்காடுப் பங்கை வகிக்கின்றன. ( U.S inventory Green house gas emission and sinks 2015)

இந்த நூறு விழுக்காட்டிலும், குறிப்பாக எரிசக்தி மற்றும் தொழிற்சாலை (31 % + 27 % = 58%) ஆகிய இரண்டு செயற்பாடுகளால் மட்டுமே. அதிக விழுக்காடு செலவாகிறது. அதற்கு முக்கியக் காரணமாக இருப்பது மின்சாரம். ஏனென்றால், இன்றைய நம் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் மின்சாரம் தேவைப்படுகிறது.

**மின்சாரம்:**

இந்தியாவில் 2015ல் 1010 kwh பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பயன்படுத்தப் படும் அளவில் 25% மின்சாரம் மட்டும்தான் புதுப்பிக்கதக்க ஆற்றல் முறையில் தயாரிக்கப் படுகிறது. மீதி 72 % மின்சாரம் புதுப்பிக்க இயலாத ஆற்றல் முறையில் தயாரிக்கப் படுவதாகும். (U.S inventory Green house gas emission and sinks 2015) இந்தப் புதுப்பிக்க இயலாத ஆற்றல் முறையில் தயாரிக்கப்படும் மின்சார உற்பத்தியின் அளவுக் கீழ்க்கண்ட அட்டவனையில் தொகுக்கப் பட்டுள்ளது.

**புதுப்பிக்க இயலாத முறையில் தயாரிக்கப்படும் மின்சார உற்பத்தியின் அளவு:**

| ஆற்றல் | MW | % | CO2 வெளியீடு |
|---|---|---|---|
| அணு | 4780 | 2 | 90 - 140 |
| அனல் | 192,535 | 69.6 | 220 - 250 |
| நீர் | 41,997 | 15.2 | |
| காற்று, சூரியக்கதிர் (புதுப்பிக்கத் தக்கது) | 36,471 | 13.2 | 10 - 42 |

(U.S inventory Green house gas emission and sinks 2015)

இதில் இக்கட்டுரை அணு ஆலையில் மட்டும் தன் கவனத்தைக் குவிக்கிறது.

**அணுமின் நிலையங்கள்:**

இந்தியாவில் மொத்தம் 8 அணுமின் நிலையங்கள் உள்ளன. மகாராஷ்ரா -1, ராஜஸ்தான் -1, குஜராத் -1, கர்நாடகா -1, உபி -1, ஹரியானா -1, தமிழ்நாடு - 2. இதில் தமிழ்நாட்டில் மட்டும் இரண்டு இடங்களில் அணு உலைகள் அமைக்கப்பட்டு இருப்பதைக் கவனிக்கவும். தமிழ்நாட்டில் கூடங்குளம் மற்றும் கல்பாக்கம் ஆகியவையே அணுமின் நிலையங்கள் செயல்பட்டு வரும் அந்த இரு இடங்களாகும். இதில் அண்மையில் கடும் எதிர்ப்புக்குள்ளானக் கூடங்குளம் அணு உலைக் குறித்து சில விபரங்களைக் காண்போம்.

1988 ல் கூடங்குளம் அணு உலை அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. 2000 ல் கட்டிடப்பணி துவங்கப்பட்டது. 2004 ல் அணு உலைக்குத் தேவையானப் பொருட்களைக் கொண்டு வந்துச் சேர்ப்பதற்காகத் துறைமுகக் கட்டுமானம். 2014 ல் 3 வது மற்றும் 4 வது ரீயாக்டர் கட்டிடப்பணி முடிவடைதல்.

**தேவைப்படும் நீரின் அளவு:**

1000 மெகாவாட் மின் உற்பத்திச் செய்ய 3000 கிராம் யுரேனியம் (U235) மற்றும் 28 இலட்சம் லிட்டர் நன்னீரும் தேவைப்படுகிறது. உற்பத்தி நடக்காதபோதும் கூட 4 இலட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீர், பராமரிப்பு மற்றும் பழுதுப் பார்க்கும் பணிகளுக்காகத் தேவைப்படுகிறது. தேவைப்படும் நன்னீர் (28 + 4 = 32 இலட்சம் லிட்டர்) கடல் நீரிலிருந்து எடுத்துச் சுத்திகரிக்கப்படுகிறது. இதனால் 72 இலட்சம் லிட்டருக்கும் மேலாகக் கடல்நீர்க் கடலிருந்து உறிஞ்சப்படுகிறது.

பொதுவாகக் கடல் நீரானது இப்புவியில் அதன் அமைவிடத்திற்கேற்ப அதன் இயற்கையான தன்மையினைக் கொண்டுள்ளது. இயற்கையான வெப்பத்தினால் ஆவியாதல், பதங்கமாதல், திரவமாதல் ஆகிய செயற்பாடுகளுக்குப் பின்னர் மழையாகப் பொழிகிறது. வெப்பத்திற்குத் தகுந்தாற் போல் ஆவியாகும் நீரின் அளவு வேறுபடும். வெப்பத்தின் அளவு அதிகரிக்கும் பொழுது ஆவியாகும் நீரின் அளவும் அதிகரிக்கும்.

குறிப்பாக நிலநடுக்கோட்டுக்கு அருகேயான வெப்ப மண்டலப் பகுதிகளில் கடல்நீர் ஆவியாதல் அதிகமாகவே நிகழும். ஆனால் வெப்பம் மிகக் குறைவாக உள்ள அல்லது அறவே இல்லாத வட மற்றும் தென் துருவப் பகுதிகளில் ஆவியாதல் ஏறக்குறைய நடைபெறுவதே இல்லை எனலாம். இதனால் தான் உலகில் அங்குப் பனிப் பிரதேசங்கள் மிகுதியாக உள்ளன, ஆனால் புவிவெப்பமயமாதலின் விளைவாக அப்பனி உருகுவதால் கடலின் நீர்மட்டமும் அதிகரித்து வருகிறது.

இப்படிக் கடல் நீர் மட்டம் உயர்வதால் கடற்கரைக்கு அருகிலுள்ள நன்னீரின் தன்மை பாதிக்கப்படுகிறது. நிலத்தடி நன்னீர்ப் பாதிக்கப்படும் பொழுது இதைச் சார்ந்துள்ள மனிதர்களோடு பிற உயிர்களும், தாவரங்களும், இயற்கைச் சூழலும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இப்படி உப்புத் தன்மை நிலத்தடி நீரில் அதிகரிக்கும் பொழுது ஊட்டச்சத்துக்களும், கனிமங்களும், சூழலின் தன்மையும் மண்ணில் மாற்றமடைகின்றன.

இதன் காரணத்தினால் 2050 இல் 55 சதவீதம் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும் எனக் கணிக்கப் பட்டுள்ளது, 2050 இல் 11 அங்குலம் முதல் 21 அங்குலம் வரை கடல் மட்டம் உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பின்னணியில்தான் கூடங்குள அணு உலையினால் கடலுக்கு ஏற்படும் பாதிப்பைக் கணக்கிட வேண்டியிருக்கிறது. அதுவும் கடல்சார் உயிரினப் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ள மன்னார் வளைகுடாப் பகுதி வரைக்கும் இதன் பாதிப்பு நீள்வதைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

**அணு உலைக் கழிவுகள்:**

கழிவுகளில் உள்ள வேதிப்பொருட்கள், அவற்றை அப்புறப்படுத்தும் முறை மற்றும் அதன் விளைவுகள் கவனிக்கத்தக்கது. யுரேனியம், புளுட்டோனியம் 1 விழுக்காடு, ஆயில் 3 விழுக்காடு, பொதுவாக 1000 மெகாவாட் தயாரிப்பதற்காக 200 - 350 M 3 (27 டன்கள்) அதிக பாதிப்புகளை உண்டாக்கும் கழிவுகளும் குவிக்கப்படுகின்றன.

யுரேனியத்தின் வாழ்நாள் நான்கில் இருந்து நாற்பத்தேழு பில்லியன் வருடங்கள். U 235 க்கு 704 பில்லியன் வருடங்கள். இது குளிர்ந்த நீரில் செயல்படக்கூடியது. இது முதலில் போருக்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை நோக்கும் போது இதன் விளைவுகள் எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதைக் கற்பனைக் கூடச் செய்ய முடியாது.

இத்தகைய அபாயகரமான வேதிப் பொருட்களைக் கொண்டுதான் மின்சாரம் தயாரிக்கப் படுகிறது. 1000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க 75 டன் யுரேனியம் U 235 பயன்படுத்தப்படுகின்றது. அணுமின் உலையில் பயன்படுத்தப்படும் யுரேனியமும், அதன் கழிவுகளைச் சேமிக்கும் முறையும் மிகப்பெரிய விளைவுகளை எற்படுத்தும் என்பதற்கு 2011 ல் ஜப்பானில் நடந்த ஃபுகுஷிமா நல்ல உதாரணம் .

அடுத்ததாக கதிர்வீச்சின் மூலம் உண்டாகும் புற்றுநோய் அபாயம் அனைவரும் அறிந்ததே. அணுக் கழிவுகளை நிலத்தடியில் புதைத்து வைத்தால் அப்பகுதியின் நிலத்தடி நீரும் மாசுப்படுகிறது.

### தாவரங்கள், பூச்சிகள் – காலநிலை மாற்றப் பாதிப்பு. ஒரு பார்வை

இந்தக் கூடங்குளம் பகுதி மன்னார் வளைகுடாவைப் போல் ஏற்கனவே காலநிலை மாற்றப் பதிப்புக்கு உள்ளாகி இருக்கும் பகுதிதான். இப்பகுதியைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழல்களைப் பற்றிய ஆய்வு இதனை நிரூபிக்கிறது. கடலில் மட்டுமல்லாது நிலத்திலும் இந்தக் காலநிலை மாற்றத்தின் பாதிப்புத் தென்படுகிறது. பொதுவாகத் தமிழகக் கடற்கரையை ஒட்டி விவசாய நிலங்கள் காணப்படுவது இயல்பு. மன்னார் வளைகுடாப் பகுதி தொடங்கி, கூடங்குளம் அமைந்திருக்கும் பகுதி வரையிலும் இத்தகைய விவசாயம் நடைப்பெற்று வருகிறது. இப்பகுதி விவசாயமானது ஏற்கனவே காலநிலை மாற்றத்துக்குக் காரணமானக் காரணிகளுள் ஒன்றான, செயற்கை உரம், பூச்சிக் கொல்லிகள் இவற்றால் பாதிப்புக் கண்டிருக்கிறது. இது குறித்துச் சற்று விவரமாகக் காண்போம்.

காலநிலை மாற்றத்தினால் பெரும் பாதிப்பிற்குள்ளானவற்றுள் தாவரங்களும் ஒன்று. கால நிலைக்கு ஏற்பவே தாவரங்களின் வளரும் தன்மை, பூக்கும் தன்மை, காய்களின் தரம், இனப்பெருக்கம் ஆகிய அனைத்தும் உள்ளன. இந்நிலையில் காலநிலை முற்றிலும் மாறும் பொழுது இவை அனைத்தும் மாறுகின்றன. இதனால் தாவரங்கள் எண்ணிக்கைக் குறை கின்றன. இதன் விளைவாக அனைத்து உயிர்களும் உயிர் வாழ முதற் காரணமாக இருக்கக்கூடிய சுவாசத்திற்குத் தேவையான ஆக்சிஜன் குறைந்து, கார்பன் டை ஆக்சைடின் அளவு அதிகரிக்கிறது.

இப்படித் தாவரங்களின் இயல்பு நிலை மாறும் பொழுது தாவரங்களைச் சார்ந்து வாழும் பூச்சிகளின் நிலையும் இயற்கையாகவே பாதிக்கப்படுகின்றன. பூச்சிகளின் வலசைப் போதல், மகரந்தத்தைப் பரப்புதல் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுகின்றன. புதிய பூச்சி இனங்கள் இடம் பெயர்ந்து வருகின்றன. தக்காளி போன்ற தாவரங்களில் தற்போது தென்படும் Tata Absoluta என்ற பூச்சி இனம் இந்தியாவிற்கு வந்திருப்பதற்கு, காலநிலை மாற்றம்தான் முழுமுதற் காரணம் என *National Research Center For Integra rest Mangenneat and CAR ( Indian Councilo Of Agriculture Research)* நிறுவனம் 2013-2014 ல் அறிக்கை வெளியிட்டுள்ளது.

புதுவகையான பூச்சிகளின் பெருக்கத் துக்கும் பரவலுக்கும் முக்கியக் காரணம் காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமயமாதல் தான் என *ClimateChange, Agriculture and Food Security (CCAPS) 2015* தன் ஆராய்ச்சி முடிவை அறிக்கையாக வெளியிட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட தாவரம், பூச்சிகளின் இயற்கைச் செயல்கள் மாற்றமடையும் போது நோய்த் தாக்குதலுக்கு உட்படுகின்றன. அந்த நோய்களைக் கட்டுப்படுத்த பல களைக்கொல்லிகளையும், பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்தப் படுகின்றன. இவை வாய்க்கால்கள், ஆறுகள் போன்ற நீர்நிலைகளின் வழியாக இறுதியில் கடலோர நன்னீர் நிலைகளுக்கும் கடலுக்கும் வந்து சேர்கின்றன. இத்தகைய கடலோர நீர்நிலைகளுள் ஒன்றாகக் கூடங்குளம் அருகே அமைந்துள்ள கூந்தன்குளம் விளங்குகிறது.

### பாதிப்புக்குள்ளாகும் பறவைகள்

கூந்தன் குளம் தமிழகத்தின் முக்கியச் சரணாலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இங்கு வரும் பறவைகளைக் கூடங்குளம் அணு உலை அமைந்திருக்கும் பகுதியைச் சுற்றிலும் காண முடியும். இப்பறவைகளில் அதிகம் பாதிக்கப்படுவது கடல்சார்ப் பறவைகளே. இந்தச் சரணாலயப் பகுதிகளைச் சுற்றிக் காணப்படும் பறவைகளில், கூடங்குளம் பகுதியில் மட்டும் 33 ஊர்ப் பறவைகளும், 11 வகையான வலசைப் பறவைகளும் காணப்படுகின்றன. 1985 - 88 கால இடைவெளியில் இங்கிருந்த 187 வகைப் பறவைகளில் 84 வகைகள் இப்பகுதியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் 2010 - 2014 ஆண்டு வரையிலான ஆராய்ச்சியில் பறவைகளின் இனப்பெருக்கத் தன்மைகளான முட்டைகளின் எண்ணிக்கை, குஞ்சுகளின் ஆரோக்கியம், உணவு இவை அனைத்தும் குறைந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (Jayakumar and Muralidharan, 2015)

குறிப்பாக, பறவைகள் காலநிலைக்கேற்ப இடம் பெயர்தல், வலசைப் போதல் மற்றும் அனைத்துச் செயல்களையும் மேற்கொள்கின்றன. தற்போது கூடங்குளம் பகுதியில் ஏற்பட்டிற்கும் மாற்றத்தின் காரணமாவே இத்தகைய பேராபத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. பொதுவாகப் பறவைகள் எதிர்கால அல்லது நிகழ்கால மாற்றங்களை அதன் நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தும். அதை நாம் புரிந்து கொண்டால் சிக்கல்களைக் கண்டறிந்துத் தீர்வு காணமுடியும். அணு உலையின் காரணமாகவே பறவைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் இயல்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை வலசைப் பறவைகள், ஊர்ப் பறவைகள் இரண்டிலுமே எதிரொலிக்கின்றன.

**வரத்துக் குறைந்துள்ள வலசைப் பறவைகள்:**

*1. பட்டைவாய் மூக்கன் (Ber-Tailed Godwit). 2.சிறிய கடல் ஆலா – (Little Tern) 3. ரோசட் ஆலா (Raseate Tern) 4. யுரேசியன் அரிவாள் மூக்கு உள்ளான் (Eurasian Curlew) 5.அரிவாள் மூக்கு உள்ளான் (Whinbrel).*

**எண்ணிக்கைக் குறைந்துள்ள ஊர்ப் பறவைகள்:**

*1. நீர்க்காகம் (Comorant) 2.நாரை (Heron). 3.நாகணவாய் (Myna) 4.கொக்கு (Egret)*

விவசாய நிலங்களில் உள்ள பயிர்களில் காணப்படும் பூச்சிகளை உண்டு வாழும் உள்ளூர் மற்றும் வலசைப் பறவைகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. தொடர்ந்து இந்நிகழ்வு நடப்பதால் அதன் முட்டை ஓட்டின் கெட்டித் தன்மை குறைகிறது. பின் முட்டையிடும் எண்ணிக்கையும் குறைகிறது. இதன் விளைவாக அடைகாக்க உட்காரும் பொழுது எளிதில் முட்டைகள் உடைந்து விடுகின்றன. முட்டையில் இருந்து வெளிவரும் ஒன்று இரண்டு அடுத்தத் தலைமுறையும் பலவீனமாகவே பிறக்கின்றன. அதன் உடல்நலம், இறக்கைகள் முளைத்தல், எலும்புகள், குரல்வளம், கூவும் தன்மை இவை அனைத்து சக்திகளையும் இழந்து அதன் மொத்த வாழ்க்கையையும் கேள்விக்குறியாகின்றன.

சிறிய பறவைகளை உண்டு வாழும் பெரிய பறவைகளான பருந்து, கழுகுகளும் அதிகப் பாதிப்பைச் சந்திக்கின்றன. காரணம் பூச்சிக்கொல்லி மருந்துகளில் உள்ள வேதிப் பொருட்கள் (BIO-Magnification) அதாவது ஓர் உயிரினத்திற்குள் செல்லும் பொழுது இரு மடங்காக அது பெருகுகிறது. இதனால் பாதிப்புகளும் அதன் அளவுகளுக்குத் தகுந்தாற்போல் அதிகமாகவே உள்ளன. இது போன்று பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்திய தாவரங்களைத் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் உண்டு வாழும் உயிரினங்கள் இறந்த பின்பு இம்மண்ணில் அவ்வேதிப் பொருட்கள் குவிகின்றன. இதனால் மண்ணில் இயற்கையான முறையில் நிகழும் அனைத்துச் சுழற்சிகளும், குறிப்பாகக் கார்பன் சுழற்சியில் கடைசியில் நடைபெறும் ஊடுருவல் (Leaching Biological Process) முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டு இறுதியில் கார்பன் டை ஆக்சைடின் அளவு அதிகரிக்கிறது.

கூடங்குளத்தை ஒட்டியுள்ள விவசாய நிலங்களும் உயிரினங்களும் இப்படி ஏற்கனவே காலநிலைப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்க, இப்போது அமைக்கப்பட்டுள்ள அணு உலையினால் ஏற்படும் கதிரியக்க அபாயமும் இத்துடன் இணைந்துள்ளது. நிலம் மட்டுமல்லாது நீரிலும் இதன் கரங்கள் விரிந்துள்ளன. மன்னார் வளைகுடா வரையிலும் இது பாதிப்பினை ஏற்படுத்துகிறது. இதனால் காலநிலை மாற்றம் மட்டுமல்லாமல் கதிர்வீச்சுகளினாலும் பல்லுயிரியம் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கடல் சார்ந்த இயற்கைச் சூழலும், பல்லுயிரியமும் இதனால் மிகப் பெரிய மாற்றங்களை அடைந்துள்ளன. கடலினுள் செலுத்தப்படும் அணு உலைக் கழிவு நீரின் வெப்பநிலை 300 C. இதனால் இந்நீர்க் கலக்கும் கடல் பகுதியில் மீன் இனங்களுக்கும் பிற உயினங்களுக்கும் இது கூடுதல் பாதிப்பினை ஏற்படுத்தும். அதிக உணர்த்திறன் (Sensitive) உள்ள உயிரினங்கள் அதிகம் பாதிக்கப்படும். சிறிய வெப்பநிலை மாறுபாடும் கூட அந்த இனத்தை முற்றிலுமாக அழிந்துவிடும் அபாயம் உள்ளது.

மிகவும் நுட்பமான உணர்வுடையது மீன்கள். சிறிது வெப்பநிலைக் கூடினாலும் இவை இறந்து விடும். இந்நிலையில் அணு உலையின் கழிவுநீர் மீன்களுக்கு மிகப் பெரிய உயிர்க்கொல்லி. மத்தி (Sardinella Sp), நெத்திலி (Achioves), வஞ்சரம், கெழுத்தி (Cat Fish), மற்றும் திருக்கை வகைகள் (Rayfish) ஆகிய வகைகள் காணப்படுகின்றன. இவை எண்ணிக்கையில் குறைவதோடு மட்டுமல்லாமல் அணு உலையின் கதிர்வீச்சுக்களாலும், பாதிக்கப்படும். மனிதன் உட்கொள்ளும் இம்மீன்கள் மட்டுமல்லாது 450 பிறவகை மீன்களும் இங்குள்ளன.

மேலும், அணு உலை செயற்பாட்டுக்காகக் கடலில் இருந்து எடுக்கப்படும் நீரின் வழியே மிதவை உயிரினங்களோடு, நுண்ணோக்கியில் மட்டுமே காணக்கூடிய அளவில் இருக்கும் மற்ற உயிரினங்களின் முட்டைகள், லார்வாக்கள், நுண்புழுக்கள் ஆகியவையும் குழாயின் வழியே உட்செல்வதால் உயிரினங்களின் எண்ணிக்கை மேலும் குறையக்கூடிய சாத்தியங்கள் அதிகரிக்கின்றன. இந்த அழிவினால் நாம் ஏற்கனவே கண்டவாறு நிச்சயமாகக் கார்பன்-டை-ஆக்சைடின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிக்கவே செய்யும்.

2011 ல் ஜப்பான் சுனாமி எற்பட்டதன் விளைவு அணு உலையும் பாதிக்கப்பட்டது. அதே போல் சாதாரண நாட்களிலும்கூட நீர்க்குழாய்த் துளைகள் போன்ற சிறுசிறு பிரச்சனைகளினால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். பெரிய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 15 மீட்டர் உயர சுனாமி ஏற்பட்டது. 2719 மெகாவாட் மின்சாரம் பாதிக்கப்பட்டது. 1,35,000 மக்களின் உயிர் பறிக்கப்பட்டது. 32% வீடுகள் இடிக்கப்பட்டன.

பலவசதிகள் முதலுதவி, ஆபத்துக் காலத்தை எதிர்கொள்ள அனைத்து வகையிலும்

*தயாராக இருக்கும் ஜப்பானின் நிலைமையே இதுவென்றால் இந்தியாவைக் குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். அண்மையில் சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது பேரிடர் மேலாண்மையை எதிர்கொள்ள முடியாமல் அரசு இயந்திரம் திணறியதே இதற்குச் சாட்சி.*

**அரசியல் நடவடிக்கை – செயல்பாடுகள்:**

*இந்தக் காலநிலை மாற்றம் மற்றும் புவிவெப்பமயமாதலுக்காக Cop Confrence Of Parties 1995 ல் இருந்து வருடா வருடம் நடந்து வருகிறது. இது 2019 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடைப்பெறத் திட்டமிடப் பட்டுள்ளது. வருடா வருடம் காலநிலை மாற்றத்திற்குக் காரணிகளைச் சரி செய்யும் பொருட்டுப் பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன, ஆனால் எதுவும் நடைமுறை படுத்தப்படாத காரணத்தால் வருடா வருடம் பசுமை இல்ல வாயுக்கள் உயர்ந்து கொண்டே செல்வதால் காலநிலை மாற்றமும் தொடர்ந்து நிகழ்கிறது. இதன் விளைவாகத் தற்போது நாம் சந்தித்தும், அனுபவித்தும் கொண்டிருக்கும் நிலநடுக்கம், நிலச்சரிவு, சுனாமி, வெள்ளபெருக்கு, வறட்சி, இவை அனைத்தும் எதிர்பாராத நேரங்களிலும், காலங்கள் மாறி மாறியும் நடைப்பெறுகிறது.*

*இந்த வருடமும் பாரிஸ் நாட்டில் நடைபெற்ற காலநிலை மாற்றத்திற்கான கூட்டத்தில் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத் திட்டது. ஆய்வாளர்களின் கருத்துப்படி, வளர்ந்த நாடுகளே அதிகப் பசுமை இல்ல வாயுக்களை வெளியிடுகிறது. வளரும் நாடுகளில் மிகக் குறைந்த அளவே வெளியிடு கின்றனர். ஆனாலும் வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் வளர்ந்து வரும் நாடுகளே காலநிலை மாற்றதைக் கருத்தில் கொண்டுள்ளன.*

**தீர்வு:**

*ஜெர்மனியில் 40.65% காற்று மற்றும் சூரிய சக்தியின் மூலம் எரியாற்றல் உற்பத்திச் செய்யப்படுகிறது. 4.85% உயிரி எரிப் பொருட்களின் மூலமும், 2.4% நீரின் மூலமும் மின் உற்பத்தி நடைப்பெற்று வருகிறது. இதன் மூலம் ஒரு வருடத்தில் 4.3% அளவுக்குக் கார்பன் டை ஆக்சைடு வெளியீட்டை அந்நாடு குறைத்துள்ளது.*

**முடிவு:**

*ஆகவே அணுமின் நிலையம் மற்றும் பிற புதுப்பிக்க இயலாத முறை, இயற்கையை மாசுபடுத்தும் முறை இவற்தை மாற்றி, புதுப்பிக்கும் முறை (காற்று, நீர், சூரியன்) மூலம் மின்சாரம் தயாரித்து மக்களையும் அளவோடு பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்டுத்த வேண்டும். ஏற்கனவே அளவுக்கு மீறி அத்தியவசியத் தேவைகளற்றுப் பயன்படுத்தும் துறைகளுக்குச் சட்டரீதியாக விதிகள் அமைத்து ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் வரை இந்தியா - தமிழ்நாடு மட்டுமல்லாமல் மொத்தப் புவியும் அழிவை நோக்கி மட்டுமே பயணிக்கும். நிலநடுக்கம், சுனாமி, வெள்ளம், புயல், வறுமை, பொருளாதாரம், அழிவு, உள்ளிட்ட இயற்கையின் எதிர்மறைச் செயற்பாடுகள் தொடரும்.*

*இந்நிலைத் தொடர்ந்தால் நம்மால் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இந்தப் பூமி அழிவைச் சந்திக்கும். எனவே நம் தலைமுறைகள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ நாம் இயற்கையை அதன் போக்கில் பயன்படுத்த வேண்டும். இறுதியாக, இயற்கையை நண்பனாக்கி! வரலாற்றை வழிகாட்டியாக்கி!! வாழ்க்கையைத் தத்துவாசிரியனாக்கி வாழ்வோம்.!!!*


**References:**

1.Union of concerned scientists, 2011.Nuclear power and water: Quick Facts On Nuclear Power Generation And Water Use.

2. U.S. Energy Information Administration. Electricity in the United States, 2009.

3.Envis center, 2015. Data base on gulf of mannar biosphere reserve, Department of environment, Tamil Nadu, Chennai

4. Muralidhan and Jayakumar, 2015 Impact Of Agricultural Pesticides On The Population Status And Breeding Success Of Select Species Of Fish-Eating Birds In Tamil Nadu. Report submitted to Ministry of Environment and Forest, Government of India.

5. U.S inventory Green house gas emission and sinks 2015

6. Kumar J.P. and Ambigai R, 2012 A case study approach on koodankulam nuclear power plant project. Namex International Journal of Management Research 176 Vol. No. 2, Issue No. 1.

*7. பொன். தனசேகரன், (மார்ச், 2004) நிகழ்காலம், முதற் பதிப்பு, சென்னை, கார்த்திலியா. ப: 35, 36.*








# மறைமலை அடிகளாரின் மொழிக் கொள்கை

வாலாசா வல்லவன்

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலை அடிகள் அவர்கள் 15-07-1876 அன்று நாகையில் சொக்கநாதப் பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். நாகையில் கிறித்துவப் பள்ளியில் ஆங்கில வழியில் பயின்ற அவர், தமிழ்மொழியை கற்கும் ஆவலில் நாகயில் புத்தகக் கடை நடத்திவந்த தமிழ் அறிஞர் வே. நாராயணசாமி பிள்ளை அவர்களிடம் முறையாகத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார்.

அடிகள் தமது குழந்தைப் பருவம் முதலே ஆழ்ந்த சமயப் பற்றும் இறைநாட்டமும் உடையவர். அவருடைய பதினாறாவது வயதில் நாகையில் இந்து சமயப் பரப்புரைக்காக இந்து மதாபிமான சங்கம் எனும் அமைப்பைத் தோற்றுவித்து இந்து சமயம் பற்றிய சொற்பொழிவுகளை ஆற்றி வந்தார் (கு.நம்பி ஆரூரன், தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத் தேசியமும், பக்கம் 443).

சைவ சித்தாந்தச் சண்டமாருதம் சென்னைச் சூளை சோமசுந்தரநாயகர் அடிக்கடி நாகைக்கு வருகைத் தந்து சைவ சித்தாந்தம் குறித்து சொற்பொழிவுகளை நிகழ்த்துவார். அவரது சொற்பொழிவுகளைக் கவனத்தோடு கேட்டுவந்த அடிகள் சைவ சித்தாந்தத்தின் மீது ஈடுபாடு கொண்டார். அதுவரை மாயாவாத வேதாந்தமான அத்வைத தத்துவத்தின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார் (மே.க.நூல்.444).

அடிகள் கிறித்துவக் கல்லூரிப் பணியில் அமர்த்தப் பெற்றதக்குச் சோமசுந்தரநாயகரின் தொடர்பே காரணமாகும். இச்சமயத்தில் அடிகள் சோமசுந்தர நாயகரிடத்தில் சைவ சித்தாந்தம் பற்றிய சிறப்புப் பாடங்களையும் கற்றறிந்தார் (மே.க.நூல், பக்.447).

சென்னையில் மாணவர்களுக்கு அடிகள் கற்பிக்கத் தொடங்கிய காலத்திலேயே ஓர் இதழைத் தொடங்க வேண்டும் என்கிற எண்ணம் தோன்றியது. அந்த இதழின் வழி தமிழ்மொழியின் மறுமலர்ச்சி, இலக்கியம், மதம் ஆகியன பற்றி வெளியிடலாம் எனக் கருதினார். அடிகளின் சொந்த மாத இதழ் ‘ஞான சாகரம்’ 1902 ஆம் ஆண்டு வெளிவந்தது. அவர் வெற்றிகரமாக அவ்விதழை நாற்பது ஆண்டுகள் நடத்தினார். பெரும்பாலும் அவரது எல்லா நூல்களும் இவ்விதழில்தான் தொடராக எழுதப்பட்டன (மே.க.நூல் பக்.448).

அடிகள் தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் 1905 ஆம் ஆண்டு ஞானியாரடிகள் முன்னிலையில் 'சைவ சித்தாந்த மகா சமாஜத்தை' தோற்றுவித்தார்.

மறைமலை அடிகள் 1916 ல் பார்ப்பனரல்லாதார் இயக்கமான தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் தொடங்கப்பட்ட அதே ஆண்டில் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினார். ஆனாலும் 1920 ல் தான் சமஸ்கிருதச் சொற்களைத் தன்னுடைய இதழில் நீக்கி தமிழ்ச்சொற்களை அறிமுகப்படுத்தியதாக ஆய்வாளர் கு.நம்பி ஆருரன் தெரிவிக்கிறார் (மே.க.நூல் பக்கம் 485).

தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்தமை குறித்து அடிகள் தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றை ஆறு காலகட்டங்களாகப் பிரித்துக் கூறுகிறார்.

1. தூய தனித்தமிழ் இயங்கிய கால கட்டம் (கி.பி. 1 – ஆம் நூற்றாண்டு வரை).

2. புத்த சமயக் காலம் (கி.பி.1 முதல் 4ஆம் நூற்றாண்டு வரை).

3. சமண சமயக் காலம் (கி.பி.4 முதல் 7ஆம் நூற்றாண்டு வரை).

4. சைவ, வைணவ சமயக் காலக்கட்டம் (கி.பி.7 முதல் 14ஆம் நூற்றாண்டு வரை).

5. பார்ப்பனீயக் காலக்கட்டம் (கி.பி.14 முதல் 18ஆம் நூற்றாண்டு வரை).

6. ஆங்கில ஆட்சியினர் காலக்கட்டம் (கி.பி.18 ஆம் நூற்றாண்டு முதல் அதற்கு பிந்தைய காலம் வரை) (மே.க.நூல் பக்கம் 477).

அடிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள துய தனித்தமிழ் இயங்கிய சங்க காலத்திலும் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்து உள்ளன. சமணர், பௌத்தர், வைணவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட சமஸ்கிருதச் சொற்களை அடிகள் வேறுபடுத்திக் காட்டினார். தமிழில் உருது, ஆங்கிலச் சொற்களின் கலப்பு பின்னாளில் ஏற்பட்டவை ஆகும். வைணவர்கள் மணிப்பிரவாள நடையை வளப்படுத்தியதற்கு அடிகள் அவர்களைக் குற்றம் சாட்டினார்.

வைணவர்களும் மாயாவாதக் கொள்கை யாளர்களும் தாங்களே சமஸ்கிருதத்தின் உண்மையான காவலர்கள் என எண்ணிக் கொண்டார்கள். பார்ப்பனர்கள் சமஸ்கிருதச் சொற்களை அதிகம் பயன்படுத்துவது சமூகத்தில் அவர்களுக்குள்ள உயரிய நிலையை எதிரொலிப்பதாகக் கருதினார்கள். தமிழைப் பயன்படுத்துவது தாழ்நிலை என்று கூறாமல் கூறினார்கள்.

ஆகையினாலே அவர்கள் தமிழில் எழுதுவதில் சற்றொப்ப 75 விழுக்காடு சமஸ்கிருத சொற்கள் கலந்து இருந்தன (மே.க. நூல் பக்கம் 478).

தனித்தமிழ் இயக்கத்தினுடைய மய்யக் கொள்கையே பிறமொழிகளிலிருந்து தமிழில் சொற்கள் கலந்து தமிழ் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதை தவிர்த்தலாகும். பல்வேறு காலகட்டங்களில் மறைமலை அடிகளின் நூல்களில் உள்ள சமஸ்கிருதச் சொற்களின் விழுக்காட்டினைக் காட்டும் அட்டவணை :

| ஆண்டு | பொது | இலக்கியம் | மதம் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1902 | 21% | 7% | 22% | 16% |
| 1911 | 28% | 10% | 16% | 15% |
| 1921 | 9% | 3% | 8% | 7% |
| 1931 | 6% | 5% | 5% | 5% |
| 1941 | 10% | 9% | 9% | 9% |

(மே.க.நூல் பக்.486).

1920 களில் அடிகளின் பொதுவாக அமைந்த கட்டுரைகளில் சமஸ்கிருதச் சொற்களின் பயன்பாட்டு விழுக்காடு பெருமளவில் சரிந்தது. பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொடங்கப்பட்ட பிறகு படித்த தமிழரிடையே ஏற்பட்ட பொதுவான மனமாற்றமே இதற்குக் காரணம் எனலாம் (மே.க.நூல் பக்.487–88).

தமிழ்மொழி மட்டுமே இந்தியா முழுமைக்குமான பொது மொழியாகத் தெரிவு செய்வதற்குத் தகுதியும், உரிமையும் கொண்டது என்று அடிகள் கருதினார் (மே.க.நூல் பக்.500).

ஆனாலும் தமிழ் போதுமான வளர்ச்சியை அடையவில்லை என்று கருதினார். இந்தியாவின் பொது மொழியாக எல்லாத் தகுதிகளும் இருந்தும் இந்த நிலையிலுள்ள தமிழை எப்படி நாம் ஆயத்தப்படுத்துவது என்று வருந்தினார். இந்தியையும், தமிழையும் இந்தியாவின் பொது மொழியாக ஏற்பதை அடிகள் மறுத்துரைத்தார்.

தற்போதைய நிலையில் ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருப்பதற்குத் தகுதியானது என்கிற முடிவுக்கு வந்தார். இந்தியைப் போன்றே ஆங்கிலமும் அந்நிய மொழியே. ஆனால் பல தகுதியான காரணங்களுக்காக ஆங்கிலத்தைப் பொது மொழியாக்க வேண்டும் என அடிகள் விரும்பினார். (மே.க. நூல் பக்.502).

மறைமலையடிகள் 1902 முதல் 1929 வரை மும்மொழிக் கொள்கையை ஆதரித்தார். பல்கலைக்கழகப் பாடங்களில் தாய்மொழி, சமஸ்கிருதம், ஆங்கிலம் மூன்று மொழிகளும் கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்று பலமாக ஆதரித்தார் (மே.க.நூல் பக்.503).

சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்டு தந்தை பெரியார் 1926 ல் குடிஅரசு ஏட்டில் இந்தி, சமஸ்கிருதம் ஆகியவற்றை எதிர்த்த பிறகே மறைமலை அடிகள் தன் மும்மொழிக் கொள்கைகளை மாற்றிக் கொண்டார்.

1929 க்குப் பிறகு அவர் இறுதிக்காலம் வரையில் ஆங்கிலம், தாய்மொழி என்ற இருமொழிக் கொள்கையை ஆதரித்து வந்தார் (மே.க.நூல் பக்.503).

தமிழ்நாட்டுக் கோவில்களில் வழிபாடு செய்வதற்குக்கூடத் தமிழில் கட்டாயம் செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தவில்லை. சமஸ்கிருதத்தில் வழிபாடு நடத்தக் கோருவோருக்கு அம்மொழியில் நடத்த வேண்டும் என்றார்.

**....எக்காரணம் கொண்டும் தமிழோடு ஆங்கிலத்தையும் இணைத்துக் கற்பிப்பதைத் தவிர்த்துவிடாதீர்கள்... தமிழ் கற்றலில் இருந்து ஆங்கிலம் கற்றலைப் பிரித்துவிடாதீர்கள்**
**-மறைமறைஅடிகள்**

சுயமரியாதை இயக்கம் வடமொழியை, சமஸ்கிருதத்தை எதிர்த்தது போல் மறைமலையடிகள் எதிர்க்கவில்லை. அதற்குக் காரணம் அவருடைய சமய உணர்வேயாகும். கோவில்களில் வடமொழியில் ஓதுவதை அவர் தடுக்க விரும்பவில்லை.

“நம் அடிகள், சிறப்பு வகையில் சைவ சமயத் துறவி; பொது வகையில் இந்து சமயி என்று தன்னைப் பெருமையுடன் கூறிக்கொள்பவர். திருக்கோவில்கள், தெய்வத் திருவுருவச் சிலைகள், சமய அடையாளங்கள், கோவில் விழாக்கள், திருநாட்கள், அறிவுக்கொத்த சமய சடங்குகள், இந்து சமயத்தின் பொதுக் கருத்துகளான மறுபிறப்பு, இருவினை, கொல்லாமை, மோட்சம், நரகம் இவற்றில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர். கோயில்களில் வழிபாடு செய்வோர் ஆதிசைவ பார்ப்பன ரல்லாதவராதலின், அவர்களை அப்பணியிலிருந்து நீக்கல் வேண்டாம் என்ற கருத்துடையவர், கோயில் சடங்குகளும், வழிபாடுகளும் தமிழில் நடக்க வேண்டும் என்பவர். ஆனால், வடமொழியில் நடத்துவோரைத் தடுத்தல் கூடாது எனக் கருதுபவர். இந்து சமயம் என்ற பொதுப்பான்மையில் வடமொழியும் மறுக்கற்பாலதன்று என்னும் எண்ணமுடையவர். இந்தியா, இந்தியர், இந்துக்கள் என்ற ஒருமைப்பாட்டில் - சிவபெருமானைப் போற்றுகின்றதென்ற மதிப்பில் வடமொழியையும் ஏற்றுக் கொண்டவர்” (மறை திருநாவுக்கரசு, தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் வரலாறு, பக்.545).

வடஇந்தியா சென்று திரும்பிய மறைமலை யடிகளுக்கு 20.07.1913 அன்று வரவேற்புக் கூட்டம் சென்னையில் நடத்தப்பட்டது. அங்கு உரையாற்றிய மறைமலையடிகள் “இந்து சமய உணர்ச்சியால் இந்தியா ஒரு நாடாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இந்து சமயமே நம் உயிர். நம் சைவ வைணவ சமயங்கள் அவற்றின் உணர்ச்சிகள் அங்கு வெள்ளமாகப் பரவிக் கிடக்கின்றன. காசுமீரம் முதல் கன்னியாகுமரி வரையில் இந்தியா ஒரே நாடு. இதை சைவ, வைணவ சமயிகளும், தமிழர்களும் மறக்கலாகாது. வடநாட்டில் நம் சிவ வழிபாடு மாண்புடன் போற்றப்படுவது நமக்குப் பெருமையும், வலிமையும் தருவதாகும். நம் சமயங்கட்குப் பிற நாட்டவரால் தமிழ்நாட்டில் ஊறுநேர்ந்தால் வடவரும் உயிர்கொடுத்து போராடி நம் சமயங்களையும் கோயில்களையும் பாதுகாப்பர். சைவம் என்று நாம் கருதுகையில் தமிழ்நாட்டை மட்டும் கருதலாகாது; இந்தியா முழுவதையுமே கருத வேண்டும்” (மே.க. நூல் பக்.206).

அடிகள் தம் இறுதிக்காலம் வரையில் தாம் எழுதிய நூல்கள் அனைத்திலும் ‘நம் இந்திய நாடு’, ‘நம் இந்திய மக்கள்’, ‘நம் இந்து மக்கள்’, ‘நம் இந்து சமயம்’ என்றே நம் நாட்டின் பொதுமையை பற்றி எழுதுமிடங்களில் எழுதியிருக்கிறார். 16.09.1943 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரவையில் அவர் உரையாற்றிய போது எழுத்து வழியாக ஒருவர் திராவிட நாடு பற்றி தங்கள் கருத்து யாது? என ஒரு கேள்வி கேட்டார்.

அதற்கு அடிகள் விடையளிக்கையில், “இந்தியா முழுவதுமே திராவிட நாடு தான்” என்று கூறினார். இந்தியை எதிர்த்துத் தமிழ் முழக்கஞ் செய்த அடிகள் சிறப்பு முறையில் தமிழ்நாடு; தமிழ் மக்கள் என்றார்களேயன்றி இந்திய ஒருமைப்பாட்டை அவர் தம் பேச்சிலோ எழுத்திலோ என்றும் எங்கும் எதிர்த்ததில்லை (மே.க.நூல் பக்.686-87) என்று அவருடைய மகன் மறை திருநாவுக்கரசு எழுதிய தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் என்ற நூலிலே குறித்துள்ளார்.

அடிகளார், இன்றைய தமிழர்களை ஆரியர் என்றும் தமிழர் என்றும் பிரித்துப் பார்த்து வேறுபடுத்த இயலாது என்று எண்ணினார். அதேபோல மொழி அடிப்படையில் மக்களை வேறுபடுத்தி அடையாளங்

காண்பதும் நடைமுறைக்கு ஒத்துவராது என்று அவர் கருதினார். மேலும் ஆரியர்கள் வடமேற்கு ஆசியா பகுதியிலிருந்து இந்தியாவுக்கு வந்து, இங்கு வாழ்ந்து வந்த ஆதிக்குடிகளுடன் கலந்துவிட்டார்கள் என்பதை அப்படியே முழுமையாக ஒப்புக் கொண்டாலுங் கூட, பல நூற்றாண்டுகளாக அவர்களிடையே ஏற்பட்ட இரத்தக் கலப்பினால் திராவிட - ஆரிய வேறுபாட்டை அடையாளங் காண்பது இயலாதது என்றும் அவர் நினைத்தார் (கு. நம்பி ஆருரன், தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத் தேசியமும், பக்.527).

இந்தச் சமூக அமைப்பில் கட்டுப்பாடற்ற இனக்கலப்பு ஏற்பட்டுவிட்ட பின்னணியில், மனித இயல் ஆய்வு முடிவுகளுக்கு மாறாக ஐயம் திரிபுஅற ஒருவரை 'ஆரியன்' என்று குறிப்பிடுவது உண்மையும் நியாயமும் ஆகுமா? எனவே இந்தியாவின் வடமேற்கு மூலையில் தனித்து ஒதுங்கி வாழ்கிற ஒரு சில மக்களைத் தவிர, மற்ற அனைவரின் இரத்த நாளங்களிலும் ஓடுவது, நினைவுக் கெட்டாத காலம் முதல் இன்றுவரை திராவிட இரத்தமே என்ற திடமான முடிவுக்கு வந்தார் அடிகளார் (மே.க.நூல் பக்.530).

1926 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சியில் தமிழ்மொழி வளர்ச்சிக்கென தமிழ் பல்கலைக்கழகம் அமைக்க முயற்சி செய்யப்பட்டது. பெரியார் அதை ஆதரித்தார். பார்ப்பனரல்லா தமிழறிஞர்கள் அதன் ஆட்சி மன்ற குழுவில் இடம்பெற வேண்டும் என்றும் குடிஅரசு ஏட்டில் எழுதினார்.

மறைமலையடிகள் தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் தேவையில்லை என்று 14.08.1926 ல் 'மெட்ராஸ் மெயில்' ஆங்கில ஏட்டிற்கு நீண்ட கடிதம் எழுதினார். 03.09.1926 ல் அக்கடிதம் வெளியிடப்பட்டது.

**தமிழுக்காக ஒரு பல்கலைக்கழகம் தேவையில்லை :**

தற்கால ஆய்வு நெறிகளுக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் ஏற்ப, தமிழ்மொழியின் மூலக்கூறுகளைச் செழுமைப்படுத்தி மீண்டும் ஆர்வத்துடன் தமிழ் கற்கச் செய்யும் முயற்சி பாராட்டுக்குரியதுதான். ஊக்கந்தந்து உற்சாகப்படுத்த வேண்டியதுதான். ஆனால் இன்றைய நிலையில் தமிழுக்கென தனிப் பல்கலைக்கழகம் அமைப்பதால் நல்ல பலன் விளையும் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. இதனை எல்லாக் கோணங் களிலிருந்தும் அலசி ஆராய்ந்தேன். இறுதியில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்போது அமைக்க வேண்டாம் என்ற முடிவுக்கே வர முடிந்தது.

....எக்காரணம் கொண்டும் தமிழோடு ஆங்கிலத்தையும் இணைத்துக் கற்பிப்பதைத் தவிர்த்துவிடாதீர்கள்...

தமிழ் கற்றலில் இருந்து ஆங்கிலம் கற்றலைப் பிரித்துவிடாதீர்கள் என்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. மக்கள் வாழ்க்கைக்கு அளப்பரிய வகைகளில் பயன்படுகிற எல்லா அறிவியல் செய்திகளும் ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டிருக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழகமே எளிதாக மிகத் திறமையுடன் செய்யக்கூடிய நிலையில் தமிழுக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் தேவையற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று தங்கள் பொன்னான நேரத்தையும், ஆற்றலையும் வீணாக்கிக் கொண்டிருக்கும் பெருமக்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் நடைமுறைகளை மாற்றி அமைத்தாலே போதும் என்றார் (மே.க.நூல் பக்.569-574).

> **மக்கள் வாழ்க்கைக்கு அளப்பரிய வகைகளில் பயன்படுகிற எல்லா அறிவியல் செய்திகளும் ஆங்கிலத்தில் தான் எழுதப் பட்டிருக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழகமே எளிதாக மிகத் திறமையுடன் செய்யக்கூடிய நிலையில் தமிழுக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் தேவையற்றது.**
> **- மறைமறைஅடிகள்**

இதே கருத்தை பெரியார் சொல்லி இருந்தால், பெரியார் கன்னடியர் தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைவதை பொறாமைக் கொண்டு எதிர்க்கிறார் என்று பல தமிழ்த் தேசியவாதிகள் எழுதி இருப்பார்கள். மறைமலையடிகள் சொல்லியதால் வாய்த் திறக்காமல் உள்ளனர்.

மறைமலையடிகள் தம் பெயரை மாற்றிக் கொண்டார் என்பதும் உண்மையல்ல. மற்றவர்கள் தான் அவரை மறைமலையடிகள் என்று அழைத்து வந்தனர். ஆனால் அவர் தம் பெயரை கடைசி வரை சாமி வேதாச்சலம் என்ற எழுதிவந்தார். கையொப்பமும் சாமி வேதாச்சலம் என்றே போட்டு வந்தார். மறைமலையடிகள் 1935-38 ல் வெளியிட்டு வந்த மாதமிருமுறை ஆங்கில ஏட்டின் ( "The Ocean of Wisdom" ) ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் சாமி வேதாச்சலம் என்றே குறிப்பிட்டுள்ளார்.

**மறைமலையடிகள், தன்னை இந்து சைவன் என்றே கூறிக்கொண்டவர். இந்து, இந்தியா என்பதை ஏற்றுக் கொண்டவர். சில தமிழ்த் தேசியவாதிகள் மறைமலையடிகள் தான் முதன் முதலில் தமிழ்நாடு கோரினார்; அதைப் பார்த்து பெரியார் காப்பியடித்தார் என்று எழுதுவது வரலாற்றுப் பிழையாகும்.**

1948-இல் பன்மொழிப் புலவர் க. அப்பா துரையார் எழுதிய இந்தியாவின் மொழிச் சிக்கல்கள் என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கிய மறைமலையடிகள் சாமி வேதாச்சலம் என்றே கையெழுத்திட்டுள்ளார் (மே.க. நூல் பக்.516).

அவர் நடத்திய ஞானசாகரம் ஏடு 1902 முதல் 1942 வரையில் வெளிவந்தது. 1930 க்குப் பிறகு அறிவுக்கடல் என்பது 12 புள்ளி எழுத்திலும் ஞானசாகரம் என்பது 24 புள்ளி எழுத்திலும் மறைமலையடிகள் என்பது 12 புள்ளி எழுத்திலும் ஸ்ரீலஸ்ரீ சாமி வேதாச்சலம் என்பது 24 புள்ளி எழுத்திலும் அவரே வெளியிட்டுள்ளார்.

மறைமலையடிகள் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களிலும் ஆங்கிலத்தில் சாமி வேதாச்சலம் என்றே குறிப்பிட்டள்ளார் (மே.க.நூல் பக்.485).

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையும், மாபெரும் தமிழ் அறிஞருமான மறைமலையடிகள் மிகச் சிறந்த மொழியில் அறிஞர் ஆவார். அவருடைய இறைப்பற்று காரணமாக, தன்னை இந்து சைவன் என்றே கூறிக்கொண்டவர். இந்து, இந்தியா என்பதை ஏற்றுக் கொண்டவர். சில தமிழ்த் தேசியவாதிகள் மறைமலையடிகள் தான் முதன்முதலில் தமிழ்நாடு கோரினார்; அதைப் பார்த்து பெரியார் காப்பியடித்தார் என்று எழுதுவது வரலாற்றுப் பிழையாகும்.

பெரியாரை வெறுக்கும் சில தமிழ்த் தேசியவாதிகள் மறைமலையடிகளை தமிழ்த் தேசியத் தலைவராக காட்ட முயல்வதும், அறியாமையே ஆகும். 1938 முதல் தான் மறையும் வரை இந்தியக் கட்டமைப்பை ஏற்க மறுத்த பெரியாரை ஏற்க மறுப்பதும், இந்தியக் கட்டமைப்பை ஏற்றுக் கொண்டு அரசியல் பேசவோ எழுதவோ (இந்தி எதிர்ப்பை தவிர) விரும்பாத துறவறம் பூண்ட மறைமலையடிகள்தான் தமிழ்த் தேசியத்தின் வித்து என்பதும் ஏற்புடையதன்று.



# ஆலயப் பிரவேசம்!

யூதர்களின் புனிதத் தலங்களில் மிகப் பழமையானது ஜெருசலேமின் வெஸ்டர்ன் வால் நகரம்.இங்கு ஆண்கள் ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டு கையால் எழுதப்பட்ட விவிலிய வாசகங்கள் கொண்ட டெஃபில்லின் என்னும் கருப்புநிறத் தோல்பெட்டியை நெற்றியிலும் இடது கைபுஜத்திலும் நீண்ட வார்கொண்டு கட்டிக்கொண்டு மதச்சடங்கு களைச் செய்து வழிபடுவது வழக்கம்.ஆனால் பெண்களுக்கு இங்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், ''விமன் ஆஃப் வால்'' அமைப்பைச் சேர்ந்த பெண்ணுரிமைப் போராளிகள் ஆண்க்ளோடு சம்மாக வழிபடும் உரிமையைக் கடந்த வாரம் வென்றெடுத்தனர்.

– நன்றி.(பிப் 8 –2016 தமிழ் இந்து)

பிறப்பின் அடிப்படையில் மக்களை வருணாசிரம அடிப்படையில் 4000 சாதிகளாக பிரித்து வைத்துள்ள பார்ப்பன இந்து வேத சனாதான மதமான இந்துமதம் ஆட்சி புரியும் இந்தியாவில் கேரள மாநிலம் அய்யப்பன் கோவிலில் வருணாசிரமம், பாலின வேறுபாடு காரணமாக பெண்களை அனுமதிக்க மறுக்கும் இழிநிலை எப்போது மாறும் .?

எல்லா மதங்களுமே பெண்களுக்கு எதிரானவையாகத்தான் இருக்கின்றன. அதற்கு முக்கிய காரணம் மதவாதிகளே. நாம் வாழ்வது 21 ஆம் நூற்றாண்டு என்பதால் 7- ஆம் நூற்றாண்டின் சட்டங்களை இனியும் கடைபிடிக்கத் தேவை யில்லை.முதலில் அரசியலில் இருந்து மதத்தைப் பிரித்தெடுங்கள்.

– தஸ்லிமா நஸ்ரின் எழுத்தாளர்.
நன்றி (பிப் 8 –2016 தமிழ் இந்து)





# மயிலாடுதுறை திருநாள்கொண்ட சேரி பொதுச் சாலை வழியே தலித் பிணங்களை எடுத்துச் செல்ல எதிர்ப்பு

## உண்மை அறியும் குழு அறிக்கை

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் சுமார் 5 கிமீ தொலைவில் உள்ள வழுவூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த திருநாள்கொண்டசேரி எனும் சிற்றூரில் கடந்த இரு மாதங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி இருவரும் அடுத்தடுத்து இறந்தபோது அவர்களின் உடல்களை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வதில் பிரச்சினை ஏற்பட்டு தமிழக அளவில் கவனத்தை ஈர்த்துள்ள ஒரு நிகழ்வாக இன்று ஆகியுள்ளது. இது குறித்த உண்மைகளை அறிய கீழ்க்கண்டவாறு ஒரு உண்மை அறியும் குழு அமைக்கப்பட்டது.

**சம்பவங்களும் பின்னணியும்**

வழுவூர் பஞ்சாயத்தில் ஒரு பகுதியாக உள்ள திருநாள்கொண்ட சேரியில் மொத்தம் சுமார் 500 குடும்பங்கள் உள்ளன. இவற்றில் தலித் குடும்பங்கள் சுமார் 150 வரை உள்ளன. தலித் அல்லாதோரில் வன்னியர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். தலித்கள் திருநாள்கொண்ட சேரி, வடக்குத் தெரு, மேலத் தெரு எனப் பிரிந்துள்ளனர். திருநாள் கொண்ட சேரியில் மட்டும் சுமார் 28 தலித் குடும்பங்கள் உள்ளன. தலித்களுக்குத் தனியாகவும், பிற பிற்படுத்தப்பட்ட சாதியினருக்குத் தனியாகவும் சுடுகாடுகள் உள்ளன. சுடுகாடுகள் தனியாக இருப்பது மட்டுமல்ல சுடுகாடு செல்லும் பாதைகளும் தனித்தனியாக உள்ளன. இன்னும் சரியாகச் சொல்வதானால் தலித்களுக்கான சுடுகாட்டுக்குச் செல்ல பாதையே இல்லை எனலாம்.

யாரேனும் இறந்து போனால் மேற்கே உள்ள வடக்குத் தெரு எனும் தலித் பகுதிவரை சுமார் ஒரு கி.மீ தூரம் வயல் வரப்புகள் மேல் உள்ள ஒற்றையடிப் பாதையில்தான் இறந்தவர்களை பாடையில் வைத்துத் தூக்கிச் செல்ல வேண்டும். மழைக்காலம் என்றால் மேலும் சிக்கல். இப்படி ஒரு கி.மீ கடந்தபின் வடக்குத்தெருவின் சுடுகாட்டுப்பாதை தொடங்குகிறது. சுமார் ஒன்றரை கி.மீ தொலைவில் அந்தப் பாதையும் முடிந்து தலித்களின் சுடுகாடு அமைந்துள்ள கடலாழி ஆற்றங்கறைக்கு மறுபடியும் சுமார் அரை கி.மீ தூரம் ஒற்றையடிப் பாதையில்தான் செல்ல வேண்டும்.

வடக்குத் தெருவரை உள்ள இந்த ஒரு கிமீ வரப்புப் பாதையில் பிணங்களைத் தூக்கிச் செல்கிற கொடுமையைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி திருநாள்கொண்ட சேரியின் பொதுப் பாதை வழியே சுற்றிச் சென்று வடக்குத் தெருச் சாலையை அடைவதுதான். இதனால் பாதையின் தூரம் சுமார் ஒரு.கி.மீ அதிகமானாலும் கூட அதுதான் ஒரே சாத்தியமான வழி. எனினும் தலித்கள் தம் வீடுகள் இருக்கும் இந்த வீதி வழியே பிணம் தூக்கிச் செல்வதற்குப் பிற சாதியினர் அனுமதிப்பதில்லை.

இதுகாறும் தலித்களும் அதைச் சகித்து வந்துள்ளனர். அதேபோல ஊர் நடுவே நடுநாயகமாக வீரட்டேசுவரர் கோவில் உள்ளது. தலித்களின் பகுதிகளில் தனித்தனியே காளியம்மாள் மற்றும் மாரியம்மாள் கோவில்கள் உள்ளன. திருநாள்கொண்ட சேரிக் கிராமத்தைச் சுற்றிப் பிற்படுத்தப்பட்டோர் அதிக அளவில் வசிக்கும் பல கிராமங்களில் உள்ள இதுபோன்ற சிறு கோவில்களில் ஆண்டுதோறும் ஒரு வழக்கமுண்டு. வீரட்டேசுவரர் கோவில் குளத்தில் நீரெடுத்து வீரட்டேசுவரர் ஆலயத்தில் வைத்து வழிபட்டு அதைக் கரகமாகச் சுமந்து ஊர்வலமாகக் கொண்டு சென்று தம் ஆலயங்களில் அபிஷேகம் செய்வர். ஆனால் திருநாள்கொண்ட சேரியின் காளியம்மாள் கோவிலுக்கு இந்தக் கரக ஊர்வலம் அனுமதிக்கப்படுவதில்லை.

காலமாற்றம் தலித் மக்கள் மத்தியில் அரசியல் உணர்வையும் சமத்துவ வேட்கையையும் பெருக்கி வருகிறது. இதுபோன்ற ஒதுக்கங்களை இனிமேலும் பொறுக்க இயலாது எனும் உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருநாள்கொண்ட சேரி தலித் மக்கள் தாங்களும் வீரட்டேசுவரர் கோவிலிலிருந்து கரகம் எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தபோது அதைப் பிற்படுத்தப்பட்ட சாதியினர் ஏற்கவில்லை.

பிரச்சினை உருவாகியபோது இது குறித்து முடிவெடுக்கும் பொறுப்பு அறநிலையத் துறையிடம் விடப்பட்டது. வீரட்டேசுவரர் கோவில் அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ள ஒரு ஆலயம். அப்படியான வழக்கம் இல்லை என அறைநிலையத் துறையும் கைவிரித்தது. இறுதியில் எந்தச் சுற்று வட்டார ஆலயத்திற்கும் வீரட்டேசுவரர் கோவிலில் இருந்து கரகம் எடுக்கக் கூடாது என முடிவெடுக்கப்பட்டது. ஆக, காலங் காலமாக இருந்து வந்த வழமையை ஒழித்துக்கட்டக்கூட நாங்கள் தயார், ஆனால் தலித் மக்களுக்குச் சம உரிமை அளிக்க இயலாது என்பதுதான் பிற்படுத்தப்பட்டவர்களின் நிலைபாடாக இருந்தது.

இந்தப் பின்னணியில்தான் சென்ற நவம்பர் 26 (2015) அன்று திருநாள்கொண்டசேரி தலித் பகுதியை சேர்ந்த செல்லமுத்துவின் மனைவி எழுபது வயதுக்கும் மேற்பட்ட குஞ்சம்மாள் இறந்தார். அது கடுமையான மழைக் காலம். அதுவும் இந்த ஆண்டு பெய்த பேய் மழையை நாம் அறிவோம். வரப்புப் பாதையின் வழியே குஞ்சம்மாளின் உடலை அந்த மழை வெள்ளத்தின் ஊடாகத் தூக்கிச் செல்ல இயலாத நிலையில் தலித்கள் பொதுச்சாலை வழியே தூக்கிச் செல்லக் கோரிக்கை விடுத்தபோது அதை பிற்படுத்தப்பட்ட மக்கள் அனுமதிக்கவில்லை.

'பிற்படுத்தப்பட்டோர்' எனில் அதில் வம்மியர், தேவர், கோனார் எனப் பல சாதியினர் உள்ளபோதும் வன்னியர்களே இங்கு எண்ணிக்கையில் மிக அதிகமானோர். பிணம் தூக்கிச் செல்லும் பிரச்சினையில் இரு தரப்பினருக்கும் இடையே வன்முறை வெடிக்கும் நிலையில் அரசு தலையிட்டது. கோட்டாட்சியர் கிருஷ்ணம்மாள் வந்து உடன்பாடு ஏற்படுத்த முனைந்தார். தலித்களுக்கான அந்த வரப்புச் சாலையை விரைவில் நிரந்தரமாகத் திருத்தி அமைத்துத் தருவதாகவும் தற்போது தற்காலிகமாக அந்த வரப்புப் பாதையைத் திருத்தித் தருவதாகவும் அதன் மீது பிணத்தைத் தூக்கிச் செல்லுமாறும் தலித்கள் வற்புறுத்தப்பட்டனர்.

ஆக ஆதிக்க சாதியினர் என்ன சொன்னார்களோ அதையே அரசும் வழிமொழிந்தது. தலித்கள் அதை ஏற்கவில்லை. நான்கு நாட்கள் குஞ்சம்மாளின் உடல் அழுகிக் கிடந்தது. 30ம் தேதியன்று களத்தில் இறங்கிய காவல்துறை உடலை வன்முறையாகக் கைப்பற்றி, தடுக்க முயன்ற மக்களை மிரட்டி, பிணத்தைத் தூக்கிச் சென்றது. "பிணத்தை எரிச்சாங்களா, புதைச்சாங்களா எங்கேயாவது தூக்கி எறிஞ்சாங்களா எங்களுக்கு ஒண்ணும் தெரியாது செத்தவுங்களுக்குச் செய்யிற எந்தச் சடங்கையும் நாங்க செய்யல" என குஞ்சம்மாளின் பேரன் நெடுமாறன் எங்களிடம் கூறினார்.

**கோரிக்கைகள்**

1. நீதிமன்ற ஆணை புறக்கணிக்கப்பட்டதோடு, அது குறித்த திரிக்கப்பட்ட விளக்கத்தைச் சொல்லி வரும் காவல்துறை உயர் அதிகாரிகளான டி.ஐ.ஜி மற்றும் நாகை, திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நீதிமன்றம் இதை suo moto வாகக் கவனத்தில் எடுத்து நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்படும் ஐந்து அதிகாரிகள் மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர வேண்டும்.

3. தலித்கள் இறந்தோரைப் பொதுப் பாதையில் தூக்கிச் செல்வதைத் தடுத்தவர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வேண்டும். குற்ற நடைமுறைச் சட்டம் 109 பிரிவின் கீழ் அழைக்கப்பட்டபோது சிலர் வருவதில்லை என தலித் தரப்பில் எங்களிடம் சொல்லப்பட்டது. அது உண்மையாயின் வராதவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீதும் உரிய பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட வேண்டும்.

4. தலித்களுக்கான தனிச் சுடுகாட்டுப் பாதை அமைக்கும் அரசுத் திட்டம் கைவிடப்பட வேண்டும். அப்படி அந்தப் பாதை அமைக்கப்பட்ட போதிலும் அதில்தான் தலித்கள் பிணங்களைத் தூக்கிச் செல்ல வேண்டும் என்று கட்டாயப் படுத்தக்கூடாது. பிற பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கான பொதுச் சுடுகாட்டிலேயே தலித்களும் இறந்தோருக்கு இறுதிச்சடங்குகள் செய்யவும் இதற்கெனப் பொதுப் பாதையைப் பயன்படுத்தவும் உடன் வழி வகுக்க வேண்டும். இதற்குத் தடையாக இருப்பவர்கள் யாராயினும் அவர்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டும்.

5. இந்தப் பகுதியில் பல ஊர்களில் இந்தச் சுடுகாட்டுப் பிரச்சினை உள்ளது. குடவாசல் அருகில் உள்ள சிறுகளத்தூர் எனும் ஊரிலும் இவ்வாறு தலித்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என விடுதலை தலித் புலிகள் கட்சியின் நிறுவனர் குடந்தை அரசன் எங்களிடம் கூறினார். இது குறித்து ஆய்வு செய்து இந்நிலையை ஒழிக்க அரசு விசாரணை ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டும்.

6.திருநாள்கொண்டான் சேரி கிராமத் தலித்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் தாக்கப்பட்டும் உள்ளனர். அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட வேண்டும். இவர்கள் 35 பேர்களுக்கும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் உள்ளவாறு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். இந்த 35 பேர்கள் தவிரவும் மல்லிகா, ஜெகதாம்பாள் முதலான தலித் பெண்கள் காவல்துறையால் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் உரிய இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

7.உள்ளாட்சி நிர்வாகத்தில் ஆதிக்க சாதியினரின் ஆளுகையில் தலித்கள் பாதிக்கப்படுவதற்கு திருநாள்கொண்டான் சேரி கிராமம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அரசியல் சட்ட அவையில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்த நாட்டிற்கு பஞ்சாயத்து ராஜ் என்பது பொருத்தமற்றது என வாதிட்டதன் பொருளை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. தலித் மக்கள் அனைவரும் தாம் வசிக்கும் இடங்களுக்கு வீட்டு மனைப் பட்டா இல்லாமல் உள்ளனர். அதனால் அவர்கள் கல்விக் கடன் உட்பட உதவிகள் பெற இயலாதவர்களாகவும் உள்ளனர். இதை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை உடனடியாக வழங்க வேண்டும்.

8.அச்சம் தரும் சூழல் நிலவுவதால் தலித் மக்களுக்கு உரிய பாதுகாப்பை அரசு வழங்க வேண்டும்.

9.மாறிவரும் சூழலில் தலித் மக்களின் நியாயமான சம உரிமைக் கோரிக்கைகளை பிற்படுத்தப்பட்ட சாதியினர் மதிக்க வேண்டும் என்கிற கருத்தை இவர்கள் மத்தியில் செல்வாக்கு வகிக்கும் அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்ய வேண்டும். மாறாக இவ்வாறு பிற்படுத்தப்பட்ட சாதியினரும், தலித்களும் பிளவுபடுவது தமது தேர்தல் அரசியலுக்கு லாபமாக அமையும் என்கிற கோணத்தில் சில அரசியல் கட்சிகள் செயல்படுவது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

10. தேர்தலை ஒட்டி இவ்வாறு இப்பகுதியில் ஆங்காங்கு கலவரங்கள் ஏற்படுவது கவலை அளிக்கிறது. திருவாவடுதுறை திருவாலங்காடு பகுதியில் சென்ற மாட்டுப் பொங்கல் அன்றும் அடுத்த நாளும் இப்படி தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் மோதல்கள் நடந்துள்ளன. போலீஸ் தடியடித் தாக்குதல் நடத்தியுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கவிதா என ஒரு பெண்ணுக்கும் தலித் இளைஞர்கள் ஆறு பேர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அப்பகுதிக்கும் எங்கள் குழு சென்று வந்தது. குத்தாலம் காவல் ஆய்வாளர் ஆனந்த தாண்டவன் மற்றும் பிரச்சினைக்குரிய இடத்தில் காவல் பொறுப்பில் இருந்த ஆய்வாளர் சுகுணா ஆகியோரிடம் விரிவாகப் பேசினோம். தலித்கள் மீது இரு வழக்குகளும், பிற்படுத்தப்பட்டோர் மீது இரு வழக்குகளும் போடப் பட்டுள்ளன. தலித்களில் 19 பேர்களும், பிற்படுத்தப்பட்டோரில் 21 பேர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். பிற்படுத்தப்பட்டோர் மீது போடப்பட்ட வழக்கில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் படன்படுத்தப் பட்டபோதிலும் 3 (1) ( X ) பிரிவு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது சாதிப் பெயர் சொல்லி இழிவு செய்ததை மட்டுமே குறிக்கும் பிரிவு.

ஆனால் அதிக அளவில் தலித் இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் சரியான பிரிவுகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அதே போல பலர் இரு தரப்பிலும் கைது செய்யப்பட்ட போதும் கலவரத்திற்கு உண்மையிலேயே காரணமான முக்கியமானவர்கள் கைது செய்யப்படவில்லை என்கிற குற்றச்சாட்டும் எங்களிடம் கூறப்பட்டது. தேர்தல் நேரத்தில் இப்படியான சாதிக் கலவரச் சூழல் இப்பகுதியில் உருவாகியிருப்பது கவலை அளிக்கிறது. காவல்துறையும் ரெவின்யூ நிர்வாகமும் இதைக் கணக்கில் கொண்டு இப்பகுதியில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- பேரா. அ. மார்க்ஸ், தலைவர், மனித உரிமைகளுக்கான தேசியக் கூட்டமைப்பு, கோ. சுகுமாரன், செயலாளர், மக்கள் உரிமைக் கூட்டமைப்பு புதுச்சேரி, இரா. முருகப்பன், (இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையம் திண்டிவனம், புரட்சிமணி, தலைவர், நீலப்புலிகள் இயக்கம், கும்பகோணம், இரா.பாபு, மனித உரிமை ஆர்வலர், கடலூர், சு.அப்துல் ரஹ்மான், மாவட்டச் செயலாளர், வெல்ஃபேர் பார்டி ஆஃப் இன்டியா, கும்பகோணம், எஸ்.வீரச்செல்வன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ), மயிலாடுதுறை, இல.திருமேனி, வழக்குரைஞர், விடுதலைச் சிறுத்தைகள், கடலூர், ஏ.கங்காதரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மயிலாடுதுறை, இராஜவேலு, பகுஜன் சமாஜ் கட்சி, கும்பகோணம், முகமது யூனுஸ், ஜமாதே இஸ்லாமி, கும்பகோணம், பி.ப.பாலு, நீலப்புலிகள் இயக்கம், கும்பகோணம், சுந்தர்ராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி(மா-லெ), மயிலாடுதுறை, அ.சஃபிக்குர் ரஹ்மான், மாவட்டத் தலைவர், வெல்ஃபேர் பார்டிஆஃப் இன்டியா, நாச்சியார்கோவில்.

# திராவிடர் பண்பாட்டு வாழ்வு

காட்டாறு ஏடு வெளியிட்ட திராவிடர் பண்பாட்டு நாள்காட்டிக்கு பல்வேறு தரப்பில் இருந்து வந்த விமர்சனங்கள் 'இது மிகவும் அவசியமான புது முயற்சி' என்பதாகவே இருந்தது. இந்த நாட்காட்டியை வடிவமைத்த குழு ஏற்கனவே, திராவிடர் விடுதலைக் கழக நாட்காட்டிகளை வடிவமைத்த குழுதான்.

அவை, தலைவர்களின் படங்கள், திராவிடர் இயக்க வரலாற்றுக்குறிப்புகள், போராட்ட நினைவுகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்து வடிவமைக்கப் பட்டவை. பெரியாரின் உழைப்பையும், திராவிடர் இயக்கங்களின் பணிகளையும் விளக்கு வதாக இருந்தன. 2016ல் காட்டாறு வெளியிட்ட நாட்காட்டி, அந்த உழைப்பு – பணி களின் விளைவுகளை எடுத்துக்காட்டும் வகையில் வடிவமைக்கப் பட்டது.

பேச்சளவில் இல்லாமல், செயல்அளவிலும் பெரியாரின் திராவிடர் பண்பாட்டு அடை யாளங்களை தம்முடைய வாழ்வில் நடைமுறைப் படுத்தும் எண்ணற்ற தோழர்களில் சிலரை மட்டும் அடையாளப்படுத்தினோம். வடிவமைப்பின் அழகியல் கருதி, நாட்காட்டியில் விரிவான தகவல்களையும் கூற இயலவில்லை.

எனவே, இனிவரும் ஒவ்வொரு காட்டாறு இதழிலும் திராவிடர் பண்பாட்டு நாட் காட்டியில் இடம் பெற்ற தலைப்புகள் – அந்த 12 தலைப்புகளைத் தவிர இன்னும் கூடுதலாகப் பரப்ப வேண்டிய பண்பாட்டு நடவடிக்கைகள் பற்றி விரிவான நேர்காணல்களை வெளியிட உள்ளோம். பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியை இன்றும் தொடரும் ஆயிரக்கணக்கான தோழர்களில் இன்னும் சிலரை அறிமுகப் படுத்தவும் உள்ளோம்.

பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியைத் தம் வாழ்வில் நடைமுறைப்படுத்தும் தோழர்கள் யாராக இருந்தாலும் – எந்த அமைப்பில் பணியாற்றினாலும் – பொதுவாழ்க்கைக்கே வராமல் இருந்தாலும் அவர்கள் எங்களைத் தொடர்பு கொண்டால் அவர்களது வீச்சான செயலைக் காட்டாறில் வெளியிடுவோம். தொடர்பு கொள்ளுங்கள்.

## 1.பெயர் சூட்டலில் புரட்சி

**பல்லடம் நாராயணமூர்த்தி, வடிவேல்**

*பெயர் சூட்டலில் புரட்சி என்ற தலைப்பில், நாள்காட்டியில் இடம்பெற்றிருக்கும் தாராபுரம் தோழர் ஈ.வெ.ரா, தோழர்கள் கிருட்டிணகுமார் - சுமித்ரா இணையரின் மகள். நேர்காணலுக்குச் சென்றிருந்த போது தெளிவாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்தார் தோழர் ஈ.வெ.ரா,*

*“என் பெயர் தோழர் ஈ.வே.ரா. நான் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் 5 ம் வகுப்பு படிக்கிறேன். எங்க ஸ்கூல்ல் டீச்சர் ஏன் இந்தப் பெயர வச்சிருக்க? எனக் கேட்டார். இது என் அப்பா வெச்ச பெயர்” என்றேன். “இது ஆண் பெயராச்சே இதை எப்படி வச்சீங்க?” என மிஸ் கேட்டதற்கு, “இது ஆண் பெயருமில்லை, பெண் பெயருமில்லை மிஸ், இந்தப் பெயர், மக்களுக்குக்காகப் பாடுபட்ட தலைவர், பெரியாரின் பெயர். அவரை எனக்கு மிகப் பிடிக்கும், அதனால் இந்த பெயர் எனக்குப் பிடிச்சிருக்கு” என்றார்.*

*பள்ளி நண்பர்கள் உங்கள எப்படிக் கூப்பிடுவாங்க? என்றதற்கு 'தோழர்' என கூப்பிடுவார்கள் என பதில் உடன் வந்தது. 'தோழர் ஈ.வெ.ரா' வின் பெற்றோர் ஆசிரியர் சுமித்ரா - வழக்கறிஞர் குமார் இருவரிடம் எமது கேள்விகளைத் தொடர்ந்தோம்.*

**இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்துச் சூட்டிய தலைவர் யார்?**

*காலத்துக்கேற்ப பெரியார் பண்பாட்டை தகவமைத்துக் கொள்ள வேண்டும். தலைவர்களிடம் சென்று பெயர் சூட்டுவது அல்லது பொதுக்கூட்டங்களில் பெயர் சூட்டுவது போன்ற சடங்குகளையும் தவிர்க்க விரும்பினோம். இந்தப் பெயரை நாங்களே முடிவு செய்து நாங்களே அறிவித்துவிட்டோம்.*

*ஆரியப் பண்பாட்டுக்கு எதிரான திராவிடர் பண்பாட்டின் குறியீடாக நான் பெரியாரைப் பார்க்கிறேன். பெரியார் தனது ரஷ்யா பயணத்திற்குப் பிறகு அனைத்துத் தரப்பினரும் அவரை 'தோழர்' என அழைக்க வேண்டும் என விரும்பினார். 13.11.1932 குடி அரசு ஏட்டில்,*

"இயக்கத் தோழர்களும் இயக்க அபிமானத் தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்வதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும், ஒரே மாதிரியாக 'தோழர்' என்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகாஸ்ரீ, திரு, திருவாளர், தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீமத் என்பன போன்ற வார்த்தைகளைப் பேசவோ, எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக் கொள்கிறேன். 'குடி அரசிலும்' அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று ஒரு அறிவிப்பையே வெளியிட்டார். ஆகவே 'தோழர் ஈ.வெ.ரா' என்ற பெயரை வைத்தோம் என்றார்.

**இப்போது பெரியார் தொண்டர்களின் குடும்பங்களில் யாழ், யாழினி, யாழ்மொழி, பிரபாகரன், திலீபன், தமிழீழம், மதிவதனி என தமிழீழத்தைக் குறிக்கும் பெயர்களைச் சூட்டுவது தானே ட்ரெண்ட்?**

பெரியார் காலத்தில் அறிவியல் அடிப்படையிலும், கொள்கை அடிப்படையிலும் - வாலண்டினா, ரஷ்யா, இராவணன், இரணியன், சமதர்மம், புரட்சிக்கொடி, அறிவுக்கொடி, தன்மானம், அன்பு, இந்திரஜித், அசோகன், சித்தார்த்தன், நாத்திகராணி, திராவிடராணி, பகுத்தறிவு என்பன போன்ற பல பெயர்களைச் சூட்டினார்கள்.

தி.மு.க வளரத் தொடங்கிய காலத்தில் அறிவியல், கொள்கை அடிப்படைகள் மாறி, தமிழ் என்ற அடிப்படையில் பெயர்கள் சூட்டப்பட்டன. தற்போது ஈழப் பெயர்கள் சூட்டப்படுகின்றன. ஈழப் பெயர்கள் தான் இப்போதைய ட்ரெண்ட். என்பது உண்மைதான். ஜாதி, மத அடையாளங்கள் இல்லாமல் ஒரு நாட்டின் பெயரை, ஊரின் பெயரை அல்லது ஒரு பொருளின் பெயரை வைத்துக்கொள்வது நல்ல விசயம் தான்.

ஆனால் அந்தத் தமிழீழத்திற்கும், தமிழ்நாட்டுக்கும், இந்தியாவில் உள்ள அனைத்து தேசியஇன மக்களுக்கும் எதிராக இருப்பது ஆரியப் பண்பாடு. ஆரியப் பண்பாட்டின் அழிவில்தான் உண்மையான ஈழமோ, தமிழ்நாடோ உருவாக முடியும். அந்த ஆரியப் பண்பாட்டிற்கு எதிரான திராவிடர் பண்பாட்டுப் பெயர்களை மறக்காமல் இருப்பதே தற்போதை அவசியமான தேவை.

**பல்லடம் தோழர்கள் கருப்புசாமி - சுமதி இணையரின் மகள் 'கருந்திணை'. இவர் தன் 10 வது பிறந்த நாளில் 'வைசியா' என்ற பெயரை கருந்திணை என மாற்றியவர்.**

தோழர்கள் கருப்புசாமி- சுமதி இணையர் பெரியாரியல் வாழ்வியலுக்குப் புதியவர்கள். கடந்த நான்கு ஆண்டுகளாக இக்கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்து வருகிறார்கள். காட்டாறின் தாக்கம் தோழர்களிடம் எதிரொலித்ததின் விளைவாக, 2016 ஜனவர் 12 ம் நாள், தன் மகள் வைசியாவின் பத்தாவது பிறந்த நாளில் எங்களுக்கு அழைப்புக் கொடுத்தார். விழாவில் பாப்பா பெயரை கருந்திணை என மாத்திடலாம், கேக்கில் கூட கருந்திணை என போட்டாச்சு என எங்களுக்கு இன்ப அதிர்ச்சிக் கொடுத்தார்.

நேர்காணலுக்கு அவரின் வீட்டுக்கு சென்றிருந்த போது நான்கைந்து சிறுமிகளோடு கராத்தே பயிற்சி எடுத்து கொண்டிருந்தார் கருந்திணை..

"என் பெயர் கருந்திணை. இதுக்கு முன்னாடி 'வைசியா' அப்படின்னு இருந்துச்சு. போன மாசம் என்னோட 10 வது பிறந்த நாளில் 'கருந்திணை' அப்படினு என் பெயரை அப்பா, அம்மா, நண்பர்கள் முன்னாடி மாத்திட்டாங்க. எனக்கு வைசியா அப்படிங்கறதைவிடக் கருந்திணை தான் பிடிச்சிருக்கு என்றார். தோழர்கள் சுமதி - கருப்புச்சாமி ஆகியோரிடம் பேசினோம்.

**'கருந்திணை' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?**

முதல்ல வச்சிருந்த வைசியா அப்படிங்கற பெயர் தமிழ் பெயருமில்லை, அர்த்தமற்றதாகவும் இருந்தது. அதனால் நாங்கள் பெரியாரியல் வாழ்வியலைப் பின்பற்றுவதாலும் எங்க வாழ்வில் ஒவ்வோர் நிகழ்விலும் அதன் தாக்கம் இருக்கவேண்டும் என்பதாலும் எங்கள் மகள் வைசியாவின் பெயரை கருந்திணை என மாற்றி வைத்தோம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பழந்தமிழர் பண்பாட்டில் இருந்த திணைகள் போல - கருந்திணை என்பது பெரியாரியல் பண்பாட்டு வாழ்வியலை தம் வாழ்விலும் செய்படுத்தும் தோழர்களின் ஒருங்கிணைப்பு. ஆகவே கருந்திணை என்ற பெயரை சூட்டுவது மகிழ்ச்சியே என்றார்.

**- வளரும்**

# ‘காட்டாறு’ ஒருங்கிணைத்த கருந்திணைக் குடும்பங்களின் ஒன்றுகூடல்

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 முதல் பெரியாரியல் குடும்பங்களின் சந்திப்பு தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. 2003 லிருந்து காதலர் நாளும் தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

த.பெ.தி.க, பெ.தி.க, தி.வி.க, பெரியார் சமுதாயம், கருந்திணை, கருந்திணைப் பண்பாடு என பல்வேறு காலங்களில், பல்வேறு அமைப்புகளின் பெயர்களில் இந்த இரண்டு விழாக்களையும் ஒருங்கிணைத்து வந்த குழு - இந்த ஆண்டு காட்டாறு ஏட்டின் சார்பில் காதலர் நாளையும், கருந்திணைக் குடும்பங்களின் ஒன்று கூடலையும் ஒருங்கிணைத்தது.

14.02.16 காலை 8 முதல் மாலை 5 வரை ஒட்டன்சத்திரத்தில் இயற்கை எழில் சூழ்ந்த ஒரு தென்னந்தோப்பில் கொண்டாட்டங்களுடன் தொடங்கியது. நமது தோழர்கள் தமது இணையர்களுக்குப் பூங்கொத்துக் கொடுப்பது, மலரைப் பரிசளிப்பது, புத்தாடைகளை அணிந்து படங்கள் எடுப்பது என உற்சாகமாகத் தொடங்கிய விழாவில், காட்டாறு சார்பில் நான்கு புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

இடஒதுக்கீட்டு உரிமை, ஆர்.எஸ்.எஸ் ஸால் ஆபத்து, பாலியல் கல்வி ஒரு அறிமுகம், பேய், பிசாசு, பில்லிசூனியம் உண்மையா? ஆகிய நூல்களை திராவிட முன்னேற்றக்கழகத்தின் மாவட்ட அவைத்தலைவர் தோழர் தி.மோகன் வெளியிட திருப்பூர் தோழர்கள் சண்முகம், பாலு ஆகியோர் பெற்றுக்கொண்டனர். தொடர்ச்சியாக மற்ற நூல்களை மருத்துவர் பெரியார் செல்வி, மருத்துவர் திராவிடன் வெளியிட, தோழர்கள் திருப்பூர் மது, செம்பட்டி யாழினி, பொள்ளாச்சி இலக்கியா, மதுரை மகிழ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

திராவிடர் பண்பாட்டை - அறிவியல் பண்பாட்டை நம் சொந்த வாழ்வில் நடைமுறைப் படுத்தும்போது எழும் சிக்கல்கள் என்ன? அவற்றைக் கடந்து வெல்வது எப்படி என்ற நோக்கில் பெண்களும், குழந்தைகளும் ஒரு சிறப்பான விவாத அரங்கை நடத்தினர். பிப்ரவரி மாதத்தில் பிறந்தநாட்களையும், திருமண நாட்களையும் கொண்டாடும் சில தோழர்கள் விழாவுக்கான செலவுகளை ஏற்றுக்கொண்டனர். ஒட்டன்சத்திரம் பெரியார்நம்பி, பிரபு, தாராபுரம் குமார் ஆகிய தோழர்கள் மாட்டிறைச்சி பிரியாணி உட்பட அனைத்து உணவு ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தனர்.



தி.மு.க. மாவட்ட அவைத்தலைவர் தோழர் தி.மோகன் வெளியிட திருப்பூர் சண்முகம், பாலு ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## 'காட்டாறு' ஒருங்கிணைத்த கருந்திணைக் குடும்பங்களின் ஒன்றுகூடல்

# நூல் வெளியீடு

14.02.16 - ஒட்டன்சத்திரம்



மருத்துவர் திராவிடன் வெளியிட தோழர்கள் பொள்ளாச்சி இலக்கியா, மதுரை மகிழ் பெற்றுக் கொண்டனர்.



மருத்துவர் பெரியார் செல்வி வெளியிட தோழர்கள் திருப்பூர் மது, செம்பட்டி யாழினி,பெற்றுக் கொண்டனர்.

Owner and Publisher by : C.Vijayaragavan 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com